திராவிடநாடு

49

10—6—56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணா

சாய்ந்த சர்வாதிகாரி

★

சீறுவோரே, சிந்திப்பீர்!

★

தனிச் சொத்துரிமை

★

காங்கிரஸ் நாணயம்

வெள்ளைக்காரர்களுக்குத் தாசர்களாகயிருந்தவர்கள் இவர்கள் என்று நம்மைப் பற்றி பேசுவதில் ஒரு தனி இன்பம் காணும் தேசீயத் தலைவர்கள் இன்னும் இருக்கிறார்களல்லவா? அவர்களுக்கு ஒரு சேதி: இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு தோட்டாக்களும், குண்டுகளும டில்லிக்குத் தேவைப்பட்டதாம். அவைகளைக் குறைந்த விலைக்குச் 'சப்ளை' செய்வதற்காக தனையோ நாடுகள் முன் வந்தும், டில்லி சர்க்கார், பிரிட்டிஷ் சர்க்காருக்கே 'ஆர்டர்' கொடுத்ததாம். இதற்குக் காரணம் மவுண்ட் பேட்டன் துரைமகனார், நேராக டில்லிக்கு வந்து நேருவைப் பார்த்துப் பேசியது தானும்! இருவரும் உற்ற நண்பர்களல்லவா? அதற்குப் பாழாயிருப்பது நமது பணம்! இந்த அக்கிரமத்தை மே 29ந்தேதி பார்லிமெண்டில் எடுத்துரைத்துள்ளார் எச். வி. காமத்.

*

நாட்டின் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளையெல்லாம் சர்க்காரே எடுத்துக்கொண்டது பற்றி, நமது மாநில மாநாட்டில் கூடப் பாராட்டியிருக்கிறோமல்லவா? ஆனால், ஒருவருக்கு சர்க்காரின் இந்தக் கொள்கை பிடிக்கவில்லையாம் — கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். யாராவது டாடா, பிர்லா, டால்மியா போன்ற முதலாளிகளோ, என்று எண்ணுவீர்கள். அல்ல! அல்ல!! காங்கிரஸ் தலைவர் பி. சி. ராய் என்பவர் தான் கண்டனம் தெரிவிப்பவர். இவர், நேருவுக்கு அத்யந்த நண்பர் மட்டுமல்ல, மேற்கு வங்காளத்தை ஆளும் முதலமைச்சரே இவர்தான். டில்லி சர்க்கார் மேற் கொண்ட ஒரு நடவடிக்கையை மாகாண சர்க்காரின் தலைவர் கண்டிக்கிறார்! இந்த விந்தை எங்கு நிகழும்?

*

"கலாச்சாரத்தின் உறைவிடமாகவும், இந்தியாவின் கீர்த்திச் சின்னமாகவும் விளங்க வேண்டிய நமது தலை நகர் டில்லி' இன்று நெறி கெட்டு நிற்கிறது. மதுபானம் எங்கும் வழிந்தோடுகிறது. நமது கலாச்சாரத்தைத் தவிர எல்லாவித மான கலாச்சாரங்களும் அங்கு இடம் கொண்டுள்ளன. பாரிஸ் போன்ற நாகரீக நாடுகளின் மோஸ்தரே அங்கு இருக்கிறது" என்று தமிழகம் வந்துள்ள வினோபா, சென்னையில் கடந்த 20 ந்தேதி, 'சர்டிபிகேட்' தந்துள்ளார்.

*

மே 21-ந்தேதி, டில்லியில் அழகான சம்பவம் ஒன்று நடந்ததாம்! பார்லிமெண்டிலிருக்கும் பெண் உறுப்பினர்களில் பலர் ஒன்று சேர்ந்து, எல்லோருக்கும் விருந்து வைத்தனராம். அந்த விருந்துக்கு வந்த நேருபண்டிதர், பெண்மெம்பர்களைப் பார்த்துப் பாடுங்கள் என்றாராம். பெண்மெம்பர்கள் ஒவ்வொருவரும் வெட்கப்பட்டுக் கொண்டு பாடத் தயங்கினராம்! இதைக்கண்ட ஆண் உறுப்பினர்கள், கேலிசெய்தார்களாம். கடைசியில் ஆண்களும் பெண்களுமாக நேருவைச் சுற்றி கைகோர்த்துக் கொண்டு "நம்ப நேரு! நல்ல நேரு!!" என்று சுற்றிச் சுற்றிக் குதித்து வந்தனராம்—கோபியரும் கோகுலபாலரும் கோபால கிருஷ்ணனைச் சுற்றிக் கூத்தாடியதாகக் கூறுவார்களே, அதுபோல. செய்தியைக் கூறவந்த ஏடு, இந்த வெட்கக்கேட்டை 'நேரு கிரீடை' என்று வர்ணிக்கிறது.

*

அண்மையில் நடைபெற்ற என். ஜி. ஓக்கள் மாநாட்டில் ஆர். ஏ. கோபாலசாமி எனும் பெரிய அதிகாரி, சர்க்காரின் கடைக்கண் பார்வை விழாமல் அவதிப்படும் என். ஜி, ஓக்களுக்கு அபூர்வ யோசனை சொன்னாராம். அதாவது சம்பள உயர்வு பெறும்வரை குழந்தை உற்பத்தியில் ஈடுபடுவதில்லையென்று நீங்கள் ஒவ்வொருவரும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாக! என். ஜி, ஓக்கள் இதற்கு என்ன பதிலளித்தார்கள் என்று அறியத் துடிக்கிறீர்களா? 'காமராஜர்களல்லவே அவர்கள்!' அதனால், "முடியாது! முடியாது" என்று முழக்கமிட்டனராம்.

*

பசியாயிருக்கையிலேயும் வயிறு நிரம்பிய உணர்ச்சி ஏற்படச் செய்யும் புது உணவு சிகிச்சை ஒன்றை 'பிராங்பர்ட்' எனுமிடத்தில் அண்மையில் நடந்த வைத்யர் மகாநாட்டில் அறிவிக்கப்பட்டதாம்.

கரைத்த கடற்பாசிப்பொடியைக் கொண்டது, இது. லெமனேட் ருசியிருக்குமாம். இந்த உணவை யாவது, எமது குடும்பத்துக்குத் தருவித்துக்கொடுத்துவிட்டால் எவ்வளவோ நிம்மதியாகயிருக்குமே என்று ஏங்கும் என். ஜி. ஓக்கள் எத்தனையோபேர் கண்முன் தெரிகிறார்கள்!

*

அமைச்சர்கள் ஏர்பிடிப்பதையும் கவர்னர் மாடோட்டுவதையும் பெரிய காரியம் என்று எடுத்துப் போட்டுப் பிரசாரம் செய்கிறார்களல்லவா, இங்குள்ளவர்கள்? இதோ, ஒரு செய்தி:- கம்போடியாவிலுள்ள அமைச்சர்கள், பிரதமர் கிம்சிட் உள்பட, அனைவரும் மாதம் ஒரு நாள் வயலுக்குச் சென்று விவசாயிகளாய் உழைப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். அப்போதுதான், அவர்களுடையகஷ்ட நஷ்டங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்பது அவர்கள் கருத்து.

*

ஒரு என். ஜி. ஓ. தோழர் கேட்கிறார், "நானும் பி. ஏ. படித்தவன் தான். ஆனால், அவன் டில்லி சர்க்காரில் குமாஸ்தாவாகயிருப்பதால், என்னை விட அதிகச் சம்பளம் வாங்குகிறான். ஏன், இந்த வேற்றுமை? நாங்கள் ஆபீசிலும் கஷ்டப்படுகிறோம்; வீட்டிலும் கஷ்டப்படுகிறோம். நாங்கள் ஆபீசில் படும் கஷ்டத்தை அறிய நமது மந்திரிகள் ஒரு நாளைக்கு வந்து எங்களைப் போல குமாஸ்தாக்களாகயிருந்து பார்க்கட்டுமே!", என்பதாக. குமாஸ்தா வேலையைப் பார்க்கக் கூட படிப்பற்றவர்கள் நமது அமைச்சர்களாயிருக்கிறார்களே! இதை மறந்து விட்டார் போலிருக்கிறது அவர்!!

★

வெகுண்டெழுந்தான் பிள்ளை

(2)

தம்பி,

ஒரு கதை சொல்கிறேன், கேள். கருத்தளிக்க இட்டுக் கட்டிய கதை.

சிட்டுக்குருவி ஒன்று—அதற்குச் சிறிதளவு அதிகமான குறும்புத்தனமாம். கதைதானே, தம்பி! சிட்டுக் குருவிக்கு, குறும்பு இருக்கும் என்று எப்படி நம்புவது என்று கேட்டுவிடாதே!

மரத்திலே உட்கார்ந்து கொண்டிருந்த அதனிடம் ஒரு 'காசு' இருந்தது—அவ்வழியே ஒரு மன்னன் சென்றுகொண்டிருக்கக் கண்ட குருவி, குறும்புள்ளதல்லவா, அதனாலே, கூவிற்றும்,

"எங்கிட்டே
ஒரு காசு இருக்கு
யாருக்கு வேணும்" என்று.

மன்னன் புன்னகையுடன் இக்காட்சியைக் கண்டுவிட்டு, மேலால் நடந்தான். விடவில்லை குருவி—கீச்சுச் கீச்சென்று விடாமல் கத்திற்றும்.

"எங்கிட்டே
ஒரு காசு இருக்கு
யாருக்கு வேணும்" என்று.

வேடிக்கைக்காக மன்னன் 'எனக்குத்தான் கொடேன்' என்று கேட்டானும், குருவி, உடனே,

"ஐயயே, ஒரு
ராஜாவுக்குக்
காசு வேணுமாம்,
என் காசு
வேணுமாம்!"

என்று கூவிற்றும்.

செச்சே! மெத்தக் குறும்புத்தனம் கொண்ட குருவி இது என்று எண்ணிக்கொண்டு, மன்னன் தன் வழி செல்லலானான்; குருவி விடவில்லை.

"எனக்குப் பயந்து
எடுத்தான் ஓட்டம்
இதோ ஒரு ராஜா!"

என்று பாடிற்றும்.

போக்கிரிக் குருவியே, என்று கோபமாக அல்ல, செல்லமாகக் கூறியபடி, மன்னன் குருவியை ஓட்டினானும்—குருவி அப்போதும் சும்மா இருந்ததா? அதுதான், இல்லை!

"குருவியைக் கொல்ல
வருகிற ராஜா
பறந்து வா, பார்ப்போம்!"

என்று சவால் விட்டதாம்!

மன்னன் சிரித்தபடி, தன் அரண்மனையை நோககி விரைந்தான். குருவி, குறும்புத்தனத்தை விடவில்லை.

"எனக்குப பயந்து
ஓடிப்போனான
ஏமாந்த ராஜா"

என்று கூவிற்றும்.

கதை! கருத்து என்ன என்பது புரிகிறதல்லவா? குறும்புக் குணம் கொண்டவர்கள், ஒருவர் எதைச் செய்தாலும், ஏதாவது பேசுவர்; நமது எந்தச் செயலுக்கும ஏதேனும் ஓர் விஷமத்தனமான பொருள கொண்டு, ஏசுவர்! அதிலும் அரசியல் உலகில், சொல்லத்தேவையில்லை; வாயைக் கிளறி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதிலே வல்லமை மிக்கவர்கள் ஏராளம்! அதிலும் தாமாக ஏதேனும் செய்ய இயலாத நிலையோ, அல்லது எதைச் செய்யினும் ஏமாற்றமே காணும் நிலையோ ஏற்பட்டுவிட்டால், சொல்லத் தேவையில்லை, பிறர் செய்யும் எந்தச் செயலும் அவர்களுக்குக் 'கேலிக் கூத்தாக'—'வீண் வேலையாக'த்தான் தெரியும்!

தி. மு. க.—தானே! பேசுவார்கள்—ஓயாமல் பேசுவார்கள்—ஓராயிரம் விஷயம் பற்றிப் பேசுவார்கள்—எது ஓட்டை, எங்கே ஒடிசல் என்று தேடித் தேடிக் கண்டு பிடித்துப் பேசுவார்கள் — வேறே என்ன செய்வார்கள்? — என்று பேசுவர்!

சலிப்போ, கோபமோ கொண்டு ஒரு நாலு நாளைக்கு, நமக்கேன வீண் தொல்லை, என்று 'பேசாமல்' இருக்கிறோம் என்று வைத்துக் கொள—அவர்கள் வாய் அடைத்துப்போகும் என கிறாயா! இல்லை!

சிந்துவார் இல்லை இதுகளை. சத்தமேகாணோம் மூச்சுப்பேச்சு இல்லை முடிந்தது இதுகள் கதை.



இவ்விதம் 'ஏளனம்' கிளம்பும்.

"கத்தத் தெரியும்; கரடியாக! கண்டபடி பேச முடியும். போராட்டம் நடத்துவரோ! அதற்கான ஆற்றல் ஏது இதுகளிடம்"

எனறோர் சமயம் பேசுவர்; அந்த ஏளனப் பேச்சால் எரிச்சல் கொண்டு, கிளர்ச்சி, போர், ஏதேனும் துவக்கி ஈடுபடுகிறோம் என்று வைத்துக்கொள், தம்பி, பயல்கள் பரவாயில்லை! இப்போதுதான், 'சூடு சொரணை' பிறந்தது என்று பேசும் அளவுக்காவது பண்பு காட்டுவார்களோ? அவர்களால் அதுவும் முடிவதில்லை!

பூ! பூ! போராம், போர்! எதற்காகப் போர். தாங்கள் இருப்பதைக்காட்டிக்கொள்ள வீண் ஆரவாரம் விளம்பரத் துக்காக இந்த வீறுப்பு!

இவ்விதம் இருக்கும் இயலாமையை மறைத்திட இழிமொழி பேசுவதைக் கலையாக்கிக்கொண்டவர்கள் போக்கு!

நமது சிந்தனை தம்பி, இத்தகைய 'சிட்டுகள்' மீது செல்லக்கூடாது! சென்றதில்லை, எனவேதான், நாம் எடுத்த காரியத்தில் வெற்றி பெற்று வருகிறோம்.

மாநில மாநாடு நடைபெறப் போகிறது என்று நாம் செய்தி வெளியிட்டபோது,

சிரித்தார்கள்—ஏளனமாக! சேர்ந்துவரோ, இதுகளை? என்று கேட்டனர்.

மாநாடு மகத்தானதோர் வெற்றியாக அமைந்திருக்கிறது.

110000 ரூபாய்கள் நுழைவுக் கட்டணமாகக் கிடைத்தது என்று நாம், குதூகலத்துடன் கூற முடிந்தது.

நாவலர் இப்போது கணக்காயும் வேலை பார்த்து வருகிறார்; எனவே மேற்கொண்டு, விளக்கம் நமக்கெல்லாம் விருந்தாகக் கிடைத்த வண்ணமிருக்கிறது.

நுழைவுக் கட்டணம்
1,12000

பிரதிநிதிகள் கட்டணம்
5000

பொதுக்குழு உறுப்பினர் கட்டணம்
1000

அங்காடி உரிமைக் கட்டணம்
6000

இத்துடன், மாநில மாநாட்டுக்காக, மாவட்டங்கள் முன் கூட்டியே அளித்த நன்கொடைத் தொகை
28000

ஆகமொத்தத்தில் வரவு என்ற வகையில் கிடைத்த தொகை,
1,52000

இனி, மாநில மாநாட்டுக் கொட்டகை அமைப்புக்காக நாம் வாங்கிப் பயன்படுத்தி இப்போது நம்மிடம் உள்ள கொட்டகைச் சாமான்கள் விற்பனை மூலம்
10,000
கிடைத்தாக வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனையும் கூட்டினால், களிப்பு மிகத்தான் செய்யும்.

மாநில மாநாட்டுக்கு நுழைவுக் கட்டணம் செலுத்தி வருவது தான், 'அறம்' என்ற உணர்ச்சி பழுதுபடாமலிருந்திருந்தால், அந்த 'அறம்' பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பொறுப்பு அனைவருக்கும் இருக்கவேண்டுமல்லவா, அதனை நாம் செம்மையாக நிறைவேற்றியிருந்திருந்தால், குறைந்த அளவு, மேலும்
50,000
கிடைத்திருக்கும்.

அதனை இழந்தது கழகம்.

வெளியாரும், வெதும்பிய மனத்தினரும், வேடிக்கை காணும் நோக்கினரும், மாற்றாரும் கூடி நமக்கு இந்தத் தொகை கிடைப்பதைத் தடுத்து விட்டனர்.

பரவாயில்லை!

இந்த முறை பெற்ற 'அனுபவம்' இனி, இவ்வித 'ஓட்டைகளை' எப்படி அடைப்பது என்ற நுண்ணறிவை, மாநாடு அலுவலில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களுக்குத் தந்திருக்கிறது.

அந்த அனுபவம், பல இலட்சத்துக்கு ஈடு—ஐயமின்றி.

நான், கூறவந்தது, தம்பி, குறும்பரும் குணக்கேடரும், நாம் மாநில மாநாடு நடத்தும் திட்டம் வெளியிட்டபோது, என்ன கூறினர்...? பெரியதோர் திடல் தேடி அலைந்த காலை, யாது பேசினர்? விரிவான அளவில் பந்தல் அமைத்தபோது, எத்துணைப் பரிகாசம் புரிந்தனர்?

"என்ன ஏமாளித்தனமய்யா இதுகளுக்கு? நாடே இங்கே திரண்டுவரும் என்ற நப்பாசையில், இதுவரை, எந்த மாநில அரசியல் கட்சியும் அமைத்திடத் துணியாத அளவில் கொட்டகை போடுகிறார்களே! சில ஆயிரம்பேர் வரக்கூடும் — அதுவும் கட்டணம் செலுத்தாமல்! மிச்சமிருக்கும் இடத்திலே எதை அடைக்கப் போகிறார்கள்?"—என்றல்லவா கேட்டனர்.

கதையில் வரும் சிட்டுக்குருவி மட்டுந்தானா, அரசியலில் பலர், இருக்கிறார்கள், அதே போக்கில்.

அவர்களெல்லாம் ஆச்சரியத்தால் தாக்குண்டு, 'ஐயயோ' போட வேண்டிய அளவில் வெற்றி கிடைத்தது.

இந்த வெற்றியைக் கண்ட பிறகாவது, அவர்கள் ஏளனம் பேசுவதை நிறுத்திக்கொண்டனரோ? முடிந்ததா, சிட்டுக் குருவியால்!

இப்போது, வேறு முறையில் தமது எரிச்சலைக் காட்டுகிறார்கள்,

ஒன்றரை இலட்சம்தானா வசூல்! என்னய்யா அநியாயம், வெறும் ஒன்றரை இலட்சம்தானா?—

ஏதோ அவர்கள் நடத்திடும் மாநில மாநாடுகளிலே ஒன்பதரை இலட்சம் வசூலாவது போலவும், நாம் செல்வாக்கற்றவர்கள் எனபதாலே வெறும் ஒன்றரை இலட்சம்மட்டுமே 'வசூல்' ஆனது போலவும் பேசித் தமது துக்கத்தைத் துடைத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

பரிதாபப் படுவோம் தம்பி, பரிதாபப்படுவோம்! வேறென்ன செய்யலாம்! மன்னன், தன் வழி தானே சென்றான்! அவனென்ன சிட்டுக்குருவி தன் சீரழிவான குணத்தை விட்டொழித்தாலொழிய வாளாயிருத்தலாகாது என்று காரியமாற்றினான்! வேடிக்கையான பறவை! விநோதமான போக்கு! என்று எண்ணிச் சிரித்தான்.

விந்தையான மனிதர்கள்! விசித்திர சித்தர்கள்! என்று நாமும் கூறிவிட்டு, வேறுவேலைகளைக் கவனிக்கவேண்டியதுதான்!

வேலைதான், தம்பி, நிரம்ப இருக்கிறதே!

இது சொத்தை, இது சொள்ளை என்று கண்டிப்பதும்,

இதை ஒழிக்கப் போர், அதை எதிர்த்துக் கிளர்ச்சி என்று குழப்பம் விளைவிப்பதும்

இதன் பெயரை மாற்று, அந்த முறையை அகற்று என்று எதையாவது சாக்காகக் கொண்டு கலகம் உண்டாக்குவதும் — சேச்சே! ஒரு அரசியல் கட்சி இப்படியா நடந்துகொள்வது, ஆளும் கட்சி தவறான பாதையில் சென்று மக்களுக்குக் கேடு செய்கிறதென்றால், இக்கட்சியை நீக்கிடும் வாய்ப்பு தான், மக்களாட்சி முறையில் இருக்கிறதே, தேர்தல் தானே மாமருந்து, அதிலே ஈடுபட்டு மக்களுக்குப் பணியாற்றாமல் சொல்

வீச்சம் சிற்சில வேளைகளில் கல்வீச்சம் நடத்துவதுதான், அழகா, அறமா, அரசியலா! என்றெல்லாம் காமராஜர்கள் கூறி வந்தனர்.

தேர்தல் என்பதே ஒரு பெரிய 'தெகிடுதத்தம்' ஆக்கப்பட்டிருக்கிறதே, பெரும் பணம் செலவு செய்யக்கூடியவர்களுக்குத் தானே, அவர்களுடைய குணமும் செயலும், குடிகெடுப்பதாயும், நாடு பாழ்படுவதாயும் இருப்பினும், வெற்றி கிட்டுகிறது. நடைபெறுவது ஜனநாயகம என்று பேசப்பட்டாலும், பணநாயகமல்லவா உண்மையில் காண்கிறோம், இங்கிலையில் தேர்தலில் வெற்றி பெறுவது எளிதான காரியமல்லவே, உண்மைக்கு ஊறு விளைவிக்க எண்ணற்ற வழிகளைத் திறம்படச் செய்திடும் வன்கணாளர்கள் பொதுவாழ்வுத் துறையிலே நடுநாயகர்களாகி விட்டனரே, என் செய்வது! என்று நாம் கூறினோமென்றால், கைகொட்டிச் சிரித்து, கையாலாகாத்தனத்தை மறைத்திட ஏதேதோ பேசுகிறார்கள், மக்களிடம் உள்ளபடி செல்வாக்கு இருந்தால் தேர்தலிலல்லவா அதனை எடுத்துக்காட்ட வேண்டும் என்று பேசிக் கேலி செய்வர்.

திருச்சி மாநில மாநாட்டிலே நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்தோம்.

இது கண்டு, மெத்தச்சரி, இதுதான் முறையான காரியம், ஒரு அரசியல் கட்சி இப்படித்தான் முடிவு செய்யவேண்டும் என்று பாராட்டுகின்றனரா? இல்லை!

ஒழிந்தார்கள்! அழிந்தார்கள்! தீர்ந்தது! தீய்ந்தது!—என்று சாபம் கொடுக்கிறார்கள்.

ஓட ஓட விரட்டி அடிப்போம்—உருத்தெரியாமல் ஒழிந்துவிடப் போகிறார்கள்!—என்று ஆரூடம் கணிக்கிறார்கள்.

தேர்தலில் ஈடுபடப்போவதில்லை என்று கூறினால், கையாலாகாத்தனம் என்று கேலிபேசுவது; தேர்தலில் ஈடுபடுவது என்று திட்டமிட்டாலோ, சாபம்! வெகுண்டெழுந்தான் பிள்ளையின் மனம் வெதும்புகிறது! என்ன! என்ன! இதுகள் தேர்தலில் ஈடுபடவிடுவதா! ஆஹா! எப்படி இதைச் சகிப்பேன், எவ்வாறு இதனைத் தாங்கிக்கொள்வேன்!!—என்று துக்கம் துளைத்திடும் நிலைபெற்று, தூற்றக் கிளம்புகிறார்.

காரணம், தம்பி, நாம் எந்த முறையில் பணியாற்றும்போதும், அது கழகத்தின் கட்டுக்கோப்பினைச் சமைத்திடும் பணியாகட்டும், கிளர்ச்சிமூலம் கழகத்தின் உரத்தை வலுப்படுத்தும் பணியாகட்டும், கேடு நீக்கிட அறப்போர் தொடுத்திடும் செயலாகட்டும், தேர்தல் களத்திலே ஈடுபடும் காரியமாகட்டும், எதைச் செய்ய முற்பட்டாலும், அதனைச் செம்மையாகச் செய்திடும் வழிவகை கண்டறிந்து, ஆர்வம் ஆத்திரமாகாதபடி பாதுகாத்துக்கொண்டு பணியாற்றுகிறோம், அதன் காரணமாக, நமது சக்திக்கும் மீறிய அளவில் வெற்றிபெறுகிறோமல்லவா, அந்த உண்மை வெகுண்டெழுந்தான் பிள்ளையின் உள்ளத்தை உறுத்துகிறது; திடீரென்று ஓர் திகில் பிறக்கிறது, அந்தத் திகிலிலிருந்து தப்பித்துக்கொள்ள, தீர்த்துக் கட்டிவிடுகிறேன், ஒழித்துப் போடுகிறேன், என்றெல்லாம் நம் மீது கண்டனம் வீசுகிறார்.

மாநாடு முடிவுற்றதும், மாநில முதலமைச்சர் காமராஜர் திருச்சிக்கு வந்தார் — அமைச்சர்களுக்கென்றே அமைந்துவிட்ட ஏதோ ஓர் வேலையைக் கவனிக்க.

வந்த வேலையை மறந்து பந்தல் காலைக் கட்டிக்கொண்டு நின்றானும் என்றோர் பழமொழி உண்டு, அதுபோல அவர், எதற்கு வந்தாரோ அதை மறந்தார், எடுத்தார் பாணம், தொடுத்தார் கழகத்தின்மீது!

தேர்தலில் ஈடுபடப்போகிறார்களாம்! ஈடுபடட்டும், ஈடுபடட்டும்! இவர்களுக்கு அழிவு காலம் இதுதான்!—என்று கூறிவிட்டார்.

சரி, புதியதோர் ஆபத்து அல்லது சங்கடம் என்ற முறையில் அவர் இதுபோலச் சபிக்கிறார் என்று எண்ணிக்கொள்வோம். ஆனால் அவர் அத்துடன் விடவில்லை.

தி. மு.க. தேர்தலுக்கு நிற்கிறது என்பதுபற்றி, காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் கிலிகொள்கிறோமா! ஏன், கிலி! என்ன நேரிட்டுவிடும்! மந்திரிவேலை போய்விடும் என்று நாங்கள் பயப்படப் போகிறோம்! போனால்தான் என்ன! மந்திரி வேலை, சட்டை மாதிரி! — என்று அரசியல் பேசுவதாக எண்ணிக்கொண்டு, தமக்கு ஏற்பட்டுவிட்ட கிலியை வார்த்தையாகக் கக்குகிறார்!

மிகச் சாமான்யர்கள் நாம்! ஒரு பொதுத் தேர்தலில் ஈடுபடுவதற்கான 'பேழைபலம்' அற்றவர்கள்! நாட்டின் பெரிய ஏடுகள் அத்துணையும், ஆளும் கட்சிக்குச் சாமரம் வீசி மகிழ்வன, நம்மை நிந்திப்பதில் இனிமை காண்பன! நமது திட்டமும் கொள்கையும், ஆவலோடு அனைவரும் ஓடிவந்து நமது முகாமில் சேர்ந்துகொள்ளத்தக்க விதமான, மெருகு உள்ளன அல்ல! இங்கிலையில், நாம் தேர்தலில் ஈடுபடப்போகிறோம், என்றதும், ஏன், காமராசருக்கு, பதவி பறிபோகும் என்ற பயம் கிளம்ப வேண்டும்! அதிலேதான் சூட்சமம் இருக்கிறது!

நாம் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும், நாமே எதிர்பார்க்காத அளவு வெற்றி கிடைத்து வருகிறது என்பது காமராசருக்குத் தெரியும். தமிழக அரசியல் குறிப்பேடு, இதனைத் தெளிவாகக் காட்டுகிறது.

கண்ணீருடன் பிறந்தோம்— இரண்டோர் முறை கதறித் துடித்து, கைகாலை உதைத்துக்கொண்டு, பாலூட்டுவாருஞ்சீராட்டுவாருமின்றி மடிந்துபடுவோம், என்றனர்! பிழைத்துக்கொண்டோம்— வளர்ந்து வருகிறோம்!

உட்பகை மூட்டிவிட்டால் உருக்குலைந்து போவோம என்று எண்ணி முயன்றனர் — மூக்கறுபட்டனர்.

கிளர்ச்சிகளில் ஈடுபட்டால், ஆளவந்தார்களின் அடக்கு முறையால் தாக்குண்டு, தாங்க மாட்டாமல், திகைத்துத் திண்டாடி, மூலைக்கொருவராக ஓடி ஒளிவோம் என்றனர் — அஞ்சா நெஞ்சும், அறநெறி நின்றிடும் ஆற்றலும் பெற்றவர் நாம் என்பதனை அவனி அறிந்திடச் செய்தோம்.

மாமேதையாம் ஆச்சாரியார் பேசிப் பார்த்தார், ஏசிப்பார்த்தார் கடுங்கோபம்கொண்டு, இதுகளின் கணக்கையே தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்று முழக்கமிட்டார்! நாம், வளர்ந்து வருகிறோம்.

இதேபோலத்தான், தேர்தலும்! தேர்தலில் ஈடுபட்டால் நாம் தீர்த்துக் கட்டப்பட்டு விடுவோம் என்று, கிலியும் வெறுப்பும் கொண்ட வெகுண்டெழுந்தான் பிள்ளைகள் கூறிடட்டும் — நாம், இந்தத் தேர்தலில் ஈடுபடுவதையும், கழக வளர்ச்சிக்கும் கொள்கை வளர்ச்சிக்கும், நமது குறிக்கோளில் வெற்றி காண்பதற்கும் ஓர் 'படிக்கட்டு' ஆக்கிக்கொள்வோம்—ஐயம் வேண்டாம்!

தேர்தலில் ஈடுபட்டு, எப்படி

யாவது சட்ட சபையில் இடம் பிடித்துக்கொண்டு, அதன் மூலமாகப் புதிய 'கௌரவம்' செல்வாக்கு பெற்று, பளபளப்பு அடைய வேண்டும் என்ற அற்ப நோக்கத்துக்காக நாம் ஈடுபடவில்லை.

அரசியல் பட்டுப்பூச்சிகளும் வெட்டுக் கிளிகளும் அவ்விதமான அற்ப ஆசைகொள்ளும்.

ஒரு நாட்டை மீட்டிடும் பெரும் பணியினை நமதாக்கிக்கொண்டுள்ளவர்கள், இத்தகைய இழிநிலைக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்ளமாட்டார்கள். நாம் மேற்கொண்டுள்ள பணி, நம்மை எத்துணை தூய்மையுடையோராக்கி வைத்திருக்கிறது என்பதை வெகுண்டெழுந்தான் பிள்ளைகளால் உணர்ந்துகொள்ள முடியாது. நாம் மேற்கொண்டுள்ள மகத்தான பணி—விடுதலைக் கிளர்ச்சி—தாயகத்தின் தளை ஒடித்துத் தன்னாட்சி அமைத்தல். இத்துணைப் பெரும் குறிக்கோளை, நிறைவேற்றிடத் தக்கவர்கள் நாம் என்று ஆணவம்கொண்டு நாம் இதிலே ஈடுபட்டோமில்லை. மற்றையோர், தமது மனதை வேறு வேறு பிரச்சினைகளில் பதித்துவிட்டது கண்டு மனம் வாடி, அந்தோ! தாயகமே! நின் கரங்களில் பூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கி, நின் கண்ணீர் துடைத்து, அரியணை ஏற்றி அகங்கனிந்து நோக்கி இன்புறும் அறச் செயலில் ஈடுபடாமல், அறிவாற்றல் கொண்டோர், திறம்படைத்தோர், வசதிநிரம்பியோர், விளக்கு நோக்கிச்செல்லும் விட்டில் நிலையில், எவர், நமது இன்றைய இழிநிலைக்குக் காரணமோ அவர்களின் புன்னகையைப் பெற குற்றேவல் புரியக்கிளம்பிவிட்டனரே, அன்னை அழுகிறாள், அதனைக் கண்டும் காணாதாராகி, அவளைத் துகிலுரியும் பேர்வழிகளுக்குத் துதிபாடித் திரிகின்றனரே, என்னே இக்கொடுமை, என்று எண்ணி வேதனைப்பட்டு, நாமேனும், திறனும் வசதியுமற்றுக் கிடக்கும் சாமான்யர்களான நாமேனும், அன்னையின் கண்ணீரைத் துடைத்திட முனைவோம், மாற்றாரின் ஈட்டி நமது மார்பினில் பாய்ந்து, குருதிகொட்டினும், நாம் குற்றுயிராகிப் போயினும், பரவாயில்லை, மிகச் சாமான்யர்களாகிய நாம் இந்த மகத்தான காரியத்தில் ஈடுபடுவதைக் கண்ட பிறகேனும், ஆற்றலை ஆகா வழியில் செலுத்திடும் அன்பர்கள், அன்னையின் பணிக்குத் தம்மை ஆட்படுத்தும் நிலை பெறட்டும் என்ற உணர்ச்சியுடன், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டுப் பணியாற்றிவருகிறோம்; அந்தப் பணியில், நாம் ஈடுபடுவதால் நமக்கே ஓர் புத்தம் புதுப் பண்பு கிடைத்திருக்கிறது!! மலர் பறித்திடுவோனுக்கு, தொட்டுத் தொட்டு கரமும் மணக்குமன்றோ! அது போலத்தான்! தாயக விடுதலைக்கான பணியில் ஈடுபட்டதால், நாம் தனியானதோர், ஆற்றலை, பண்பை, பொறுமை பொறுப்பு, கண்ணியம் கடமை உணர்ச்சி ஆகியவற்றினைப் பெற்றுவிட்டோம்—அதன பயனாக. நமக்கு இயற்கையாக உள்ள குறைகள் கூடத் தாமாகப் பட்டுப்போய், புதியதோர் 'தகுதி' கிடைத்து வருகிறது!!

எடுத்துக்கொள்ளும் காரியம் ஏற்புடையதாயின், ஈடுபடுவோருக்கும் அது புதுப்பொலிவு தரத்தான் செய்கிறது என்பதை, தூய பணியில் ஈடுபட்ட நாம் உணர்ந்து வருகிறோம்.

நமது சொல்லிலே ஓர் சுவையும், நமது செயலிலே ஓர் சீலமும், நமது முறைகளிலே ஓர் உறுதிப்பாடும் கிடைத்திருப்பதற்குக் காரணம், நாம் எடுத்துக்கொண்டுள்ள காரியம், கோழையையும் வீரனாக்கிடும் ஆற்றல் வாய்ந்தது. சாமான்யர்களை உயர்பண்பினர் ஆக்கிடத் தக்க தூய்மை நிரம்பியது. தம்பி! தாயக விடுதலை என்பதுபோன்றதோர் தூய பணி வேறேதுமில்லை என்பதை வரலாற்றுச்சுவடி நன்கு எடுத்துக் காட்டுகிறது. இவனா இப்படிச் செய்தான்! இவனிடமா இத்துணை ஆற்றல் இருந்துவந்தது—என்றல்லவா வியந்து புகழ்ந்தனர், விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்பற்றி! கட்கமேந்திடத் தெரியாதவன், வாட்போர் வீரர்களை விரண்டோடச் செய்திருக்கிறான்! சிற்றூரில் பிறந்து, சிறு குடிலில் வாழ்ந்து, கழனியில் வேலை செய்தவன், தன் உள்ளத்தில் தாயக விடுதலைப் பணிக்கான தூய்மைக்கு இடமளித்ததும், மேதைகள் கண்டு பாராட்டத்தக்க அறிவும், வீரக் கோட்டத்துக் காவலர்கள் கண்டு வியந்திடத்தக்க ஆற்றலும் பெற்று, வெற்றியைத் தேடித் தந்திருக்கிறான் என்பதை நமக்கு எடுத்துக்காட்டத்தானே வரலாறு இருக்கிறது.

தொட்டால் மணக்கும் ஜவ்வாது—என்று பாடுகிறார்களல்லவா, தம்பி, அதுபோல, நாம் எடுத்துக் கொண்டுள்ள காரியம், நமது சொல்லுக்கும் செயலுக்குமே ஓர் தனி மணம் கமழத்தக்க நிலையைத் தந்திருக்கிறது.

காங்கிரஸ், நாட்டு விடுதலைக்கான 'பாசறை'யாக இருந்தபோது அதிலே ஈடுபட்டிருந்தவர்களுக்கு இதே நிலை இருந்தது.

இன்று காங்கிரஸ், பாசறையுமல்ல, பல்கலைக் கழகமுமல்ல, போட்டிப் பந்தயக் கூடாரமாகிவிட்டது—எனவேதான், அதிலே ஈடுபட்டுப் பணியாற்ற, அரசியல் சூதும், அடுத்துக் கெடுக்கும் தொழில் திறனும் தேவைப்படுகிறது—அதன்பயனாக, இயல்பாக உள்ள நற்குணமே நாளாவட்டத்திலே நசித்துப்போகிறது, நயவஞ்சகம் உள்ளத்தில் தாராளமாக நெளிகிறது.

நாட்டு விடுதலை எனும் நற்காரியத்துக்கு நம்மை நாம் ஒப்படைத்து விட்டோம்; அதன் பயனாக நாமே தூய்மைப்படுத்தப்பட்டு விட்டோம்—அற்ப ஆசைகளைச் சுட்டெரித்து விட்டோம் — எனவே அதே நோக்குடனேயே; தேர்தலில் ஈடுபடுவோம்!!

தேர்தல் ஆயிரத்தெட்டு சூதுகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் பிறப்பிடம் இருப்பிடம், அந்தச் சூதும் சூழ்ச்சியும் ததும்பிடும் நிலையில் உள்ள நம்மிடம் இவர்கள் போட்டியிட்டு என்ன செய்யப்போகிறார்கள்!! நம்மாலே பேழையுடையோரை பிடித்திழுத்து வரவும், பேச்சுவிற்போரைக்குத்தகைக்கு எடுக்கவும், பேதம் பிளவு மூட்டிக் காரியம் சாதிக்கவும், தட்டிக் கொடுக்கவும் தடவிக் கொடுக்கவும், தழுவி மகிழ்ச்சி தரவும் குழைந்து குதூகல மூட்டவும் முடியுமே, இவர்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டெனப் பேசத்தானே அறிவர், கொள்கைக்கு ஒத்துவருவோரின் கூட்டுறவு மட்டும் தானே கொள்வர் இந்நிலையில் இவர்கள் தேர்தலில் ஈடுபட்டுக் காணப்போகும் பலன் என்ன? என்று வெகுண்டெழுந்தான் பிள்ளை கருதுகிறார்—கூறவே செய்கிறார்.

தம்பி! எதைச் செய்தேனும், எவ்விதமாக உருமாறியேனும், உள்ளதை மறைத்தல், இல்லது புனைதல், இளித்துக் கிடத்தல்

(15-ம் பக்கம் பார்க்க)

ஒரு உரையாடல்

திருடருக்குத் தேநீர் விருந்து!

பாராட்டு விருந்து

பாரத் கம்பெனியின் மானேஜராக இருக்கும் பாக்கியநாதன் அவர்களுக்கு, நாளை மாலை எனது இல்லத்தில், அவருடைய திறமையைப் பாராட்டி ஒரு தேநீர் விருந்து நடைபெறும். அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

தங்கள்
குண்டுப் பிள்ளை
(சோல் புரொப்ரைட்டர்,
பாரத் கம்பெனி)

*

"விருந்து வைக்கவேண்டிய விசேஷம் என்ன' என்று அழைப்பைக் கண்டதும் கேட்டேன், அருகிலிருந்த என் நண்பனை.

"உனக்குத் தெரியாதா! கடந்த வாரம்தான் கம்பெனியின் பணத்தில் ஒரு பத்தாயிரத்தைக் கையாடல் செய்தாராம், பாக்கியநாதன்" என்றார் நண்பர், என்னைக் கூர்ந்து பார்த்தவண்ணம்.

"புதிராயிருக்கிறதே உங்கள் பதில்! கையாடல் செய்த மானேஜர் கைக்கு 'காப்பு' மாட்டுவது உலக வழக்கம். பாராட்டு விருந்தல்லவோ நடத்துகிறார், பாரத் கம்பெனி முதலாளி"

"ஆமாம்! கையாடல் செய்த விஷயம் முதலாளிக்குத் தெரிந்துவிட்டது என்பதால் முகத்தைச் சுளித்துக்கொண்டு இருக்கிறாராம், மானேஜர்."

"அதனால்...?"

"முதலாளி, தேநீர் விருந்து நடத்தி, மானேஜரைத் திருப்தி செய்ய நினைக்கிறார்!"

"இதென்னப்பா! அதிசயத்திலும் அதிசயமாயிருக்கிறது! மானேஜர் மனம் கோணக்கூடாது என்று முதலாளி மிரள்கிறார் என்கிறாயே. திருடனுக்கு தேநீர் விருந்து நடத்தும் அதிசயத்தை நான் எங்கும் கேள்விப்பட்டதே இல்லையே..."

"வெளுத்ததெல்லாம்பால்என்று நம்பும் ஆள் நீ, குண்டுப் பிள்ளையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயோ?"

"கேள்விப்படுவதா? அனுபவமே உண்டே எனக்கு! அனாதை ஆசிரம உதவி நிதிக்குப் போனபோது, 'போ! போ!' என்று விரட்டிய ஆள் தானே, அவர்..."

"அப்படிப்பட்டவர், ரூபாய் பத்தாயிரம் போனது பற்றியும் கவலைப்படாது, அந்தக் காரியம் செய்தவருக்குப் பிரமாதமான விருந்து ஏற்பாடு செய்கிறார் என்றால் விஷயம் இல்லாமலிருக்குமோ?"

அரங்கண்ணல்

"என்ன விஷயம் இருக்கிறது."

"சொல்கிறேன், கொஞ்சம் பொறு" என்றான், என் நண்பன். பக்கத்தில் கிடந்த, பத்திரிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். ஆவலைக் கிளறிவிட்டு, இப்படிச் செய்கிறானே என்று எனக்குக் கொஞ்சம் ஆத்திரம்தான், ஆனாலும், அவன் உரத்துப் படித்ததைக் கேட்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானேன்.

*   •   *

நான்கு வருஷங்களுக்குள் நான்கு புது மோட்டார் கார்களை வாங்கினர் அயல் நாட்டுத் தூதராலயத்தில் வேலை பார்க்கும் ஒரு அதிகாரி. 'பழைய' கார்களைவிற்க, சர்க்காரின் அனுமதியையும் கேட்கவில்லை. சர்க்கார் அனுமதியில்லாமல்தான் முதன் முதலில் கார் வாங்கப் பட்டதாம். முதல் கார் வாங்கப்பட்ட போது அந்த அதிகாரி சொந்த ஊரிலிருந்தாராம்! கையெழுத்துப்போட்டு, வெளிநாட்டில் காரை வாங்கியது, அவருடைய மனைவியாம்! அந்தக் காரை அந்த அதிகாரி ஒரு நாள்கூட உபயோகிக்கவும் இல்லையாம். பிறகு, அதே கார் சொந்தக்காரர் ஒருவருக்கு விற்கப் பட்டதாம், குறைந்த விலைக்கு.

*

"எங்கே நண்பா, இந்தத் திருக்கூத்து நடந்தது? எகிப்திலா! பரூக் மன்னன் மனம்போனபடி ஆட்டம் போட்டுக்கொண்டிருந்த காலத்தில் இப்படியெல்லாம் அவனுடைய அதிகாரிகள் ஆட்டம் போட்டதாகப் படித்த ஞாபகம்"

"ச்சூ! கொஞ்சநேரம், சும்மா இருப்படிப்பதைக் கேள்"

*

"தூதராலயங்களில், விருந்துகேளிக்கைகளுக்கென்று வெள்ளிச் சாமான்களைச் சர்க்கார் சார்பில் வாங்கிவைத்திருக்கிறார்கள். இந்தச் சாமான்களைத் தாங்கள் எடுத்துக்கொண்டுபோய்விட்டு பதிலுக்குப் போலிச் சாமான்களை வைத்துவிட்டார்கள். சர்க்கார், சாமான்களில். தனி முத்திரை இருக்கவேண்டுமென்ற விதிகூட அனுஷ்டிக்கப்படவில்லை"

*

"அட! இதென்ன பெரும் பகற்கொள்ளையாயிருக்கிறதே?"

"அவசரப்படாதே! இதைவிட இன்னும் ரசமான விஷயங்கள் உள்ளன..."

"இதெல்லாம் எந்த சர்க்காரில், நண்பா, நடந்ததாம்? அர்ஜெண்டைனுவிலா! பிரான் எனும் சுயநலக்காரன தானே, இப்படியெல்லாம் சூதாட்டம் ஆடினுனும்..."

"சொல்கிறேன்! கேள், இன்னும்"

*

கட்டிடம் ஒன்று தூதுவராலயததுக்குக கட்டவேண்டுமென்று, அந்த நாட்டிலிருந்த தூதுவர் ஆசைப்பட்டார். அதற்காக 5¼-லட்சம் ரூபாய் செலவுசெய்து ஒரு மனையை வாங்கினுர்களா. அந்த மனை எங்கே தமக்குக்கிடைக்காமல் போய்விடுமோ எனகிற கவலையால், முடித்துக்கொடுத்தவனுக்கு ஒரு லட்சரூபாய், தரகு வேறுகொடுத்தார்கள். இவ்வளவும் செய்தபின் அந்த நிலததில் கட்டடம கட்ட முடியாது என்ற உண்மை தெரிய வந்ததாம, இதில் இனனும் அதிசயம் எனனவென்ருல், ஆரமபத்தில், சில நிபுணர்களை ஆலோசனை கேட்டபோது, "வேண்டாம் இந்த இடம். இங்கே கட்டிடம் எழுப்பமுடியாது" என்று எச்சரிக்கை கொடுத்திருந்தும் இவ்வளவு தொகை விரயமாக்கப்பட்டதாம!

*

"இதென்னப்பா! சாதாரண குப்பன், கூத்தன் கூட இப்படி ஏமாறமாட்டானே? பெரிய மேதாவிகள், அரசியல் தூதாகளா, இவ்வளவு 'கோட்டை' விட்டார்கள்"

"ஆமாம்! நண்பா ஆமாம்!"

"இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொண்டிருந்த சர்க்கார், எது?"

"சொல்கிறேன். மேலும், கேள்..."

"இன்னுமிருக்கிறதா"

"ஏராளம்!"

*

"இன்னெரு நாட்டில் மிக அவசரமாக தூதுவராலயம் ஏற்படுத்த ஆண்டுக்கு 9800 ரூபாய் வாடகையில் ஒரு மாளிகையை 15 ஆண்டு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதாம், இப்போது ஆண்டுகள் ஐந்து ஆகியும் 68000 ரூபாய் வாடகை கொடுத்த பின்பும், கட்டிடம் காலியாகவே கிடக்கிறதாம். ஒப்பந்தப்படி இன்னும் 10-ஆண்டுக்கு பணமும் கொடுக்கவேண்டுமாம்!!"

"தனிப்பட்ட அதிகாரிகளுக்குச் சொந்தமாகத் தேவைப்படும் மதுபான வகைகள், அஞ்சல் தலைகளின் காட்சிப் புத்தகங்கள், மேற்கு நாட்டு நடனக் கலையைப்பற்றிய புத்தகங்கள், தூக்கிச்செல்லும் 'டைப்' அடிக்கும் இயந்திரங்கள், 'சிகிரெட் லைடர்ஸ்' எனும் லாகிரித் தீப்பெட்டிகள், பெண்கள் அணியும் நகை வகைகள், துணிக் கூடைகள் ஆடைப் பெட்டிகள், மின்சார விளக்கு 'பல்பு'கள்,—ஏன்? கேவலம்! சவுக்காரம்கூட—அரசாங்க நிதியிலிருந்து வாங்கப்பட்டதாம். அப்படித்தான் வாங்கப்பட்டதே, அதாவது இன்னுரால் வாங்கப்பட்டது, இன்ன விலைக்கு வாங்கப்பட்டது என்கிற விபரமாவது கணக்குப் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறதா என்ருல் கிடையாதாம்!"

"ஒரு அயல்நாட்டுத் தூதுவர் தன்னுடைய சம்பளத்துக்குமேல் பன்மடங்கு தொகையை எடுத்துச் செலவழித்திருக்கிருர். ஒருதடவை, இருதடவையல்ல, ஒன்பது முறைகள் இது போல அவர் செய்திருக்கிருர்!"

"ஒரு இடத்தில், அங்குள்ள ஒருவரை உத்யோகத்தில் நியமித்துக்கொண்டார்களாம்! அவருக்கு ரு 5800-க்குமேல், சம்பளம் அதிகமாகக்கொடுக்கப்பட்டதாம்"

*

"செச்செச்சே! நண்பா, இது என்ன இது, பாதுஷா தர்பார் என்பார்களே அதுபோல இருக்கிறதே..."

"அதெல்லாம் கூடத் தோற்றுவிடும். உனக்கும் எனக்கும் தெரியும்படி பத்திரிகைகள் வெளியிட்ட தகவல்கள், இவை. இன்னும் என்னென்ன விந்தைகள் உள்ளனவோ, யார் கண்டார்கள்?"

"ஆமாம்! இப்படி, ஒவ்வொரு நாட்டிலுள்ள தூதுவராலயங்களும் இவ்வளவு ஊழல்கள மலிய விளங்கும், சர்க்கார் எது நணபனே? எது!"

"வேறு எது நண்பா! நமது சுதந்திர ஜோதி ஜொலிக்கும் டில்லி சர்க்கார்தான்!"

"என்ன?"

"ஆமாம்! ஆசிய ஜோதி, உலக மேதை, ஒப்பறற ஞானஒளி என்றெல்லாம் போற்றுகிருர்களே அந்த நேரு பண்டிதரின் கையிலிருக்கும், வெளிநாட்டிலாகாவில்தான் இத்தனை ஊழல்களும்..."

"கேட்க வெட்கமாயிருக்கிறதே! ஏன், நண்பா, வெளிநாட்டிலிருப்பதால் இந்தத தூதுவராலயங்கள் செய்யும் ஊழல்கள், நேருவின் கவனத்துக்கு எட்டாமற் போய்விட்டதோ? என்ன இருந்தாலும், இப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடப்பதைச் சகித்துக்கொள்ளக்கூடியவர் அவர் என்று என்ருல் நம்ப முடியவில்லை!"

"யார்தான் நம்ப முடியும்? எவ்வளவு சங்கநாதம் செய்கிருர்கள் இங்குள்ள காமராஜரும் சுப்ரமணியமும்! எமது நேரு சர்க்காருக்கு ஈடு இணை ஏது, என்று எப்படியெல்லாம் முழக்கமிடுகிருர்கள். அவைகளைக் கேட்கும் யாருக்குத்தான், நேருவின் துரைத்தனத்தில் இவ்வளவு அக்கிரமம் நடக்கிறதென்று நம்ப முடியும்?"

"ஆமாம், அதனுல்தான் நினைத்தேன! வெகு தூரத்தில், கடல் கடந்து இந்தக காரியாலயங்கள் இருப்பதால்தான் நேருவால் இந்த ஊழல்களைக் கண்டுபிடிக்க முடியவில்லைபோலும்..."

"அப்படித்தான் நண்பா, தோன்றும். 'இந்து' இதழ்கூட, இது போலத்தான எழுதியிருக்கிறது. இன்னும் சில விபரங்களை உனக்குச் சொல்லுகிறேன்! இவை, எங்கும் வெளிநாட்டில் நடந்துவிடவில்லை. சாட்சாத் நேருவின் கண்ணுக்கெதிரே, இந்திய மண்ணில்தான நடந்திருக்கிறது..."

"என்ன..."

"திகைக்காதே. கொஞ்சம் பொறுமையுடன் அந்த விபரங்களைக் கேள."

*

"புதிதாக வரும் வெளிநாட்டுப் பிரமுகருக்கு பல இடங்களில், பல பெயர்களின் கீழ் ஒருவரே பல விருந்துகள் வைத்து உபசரித்து அனுப்பியிருக்கிருர்!"

"ஒரு தலைவி (பெண்ணமைச்சராகத்தானிருக்க வேண்டும்!) ஒரு விருந்தினருக்கு, அரசாங்கச் செலவில், விருந்து நடத்தினுர், அதே விருந்தினருக்கு, அதே இடத்தில், அரசாங்கத் தொடர்பற்ற தனிப்பட்ட ஆளும் ஒரு விருந்து நடத்தினுர். இரண்டுக்கும் சேர்த்து சர்க்கார் 'கஜானு'விலிருந்துதான் பணம் கொடுக்கப்பட்டது!"

"வெளிநாட்டிலிருந்து மாணவர்கள் குழு ஒன்று இந்தியாவுக்கு வந்தது. அக்குழுவை இந்திய சர்க்காரின் சார்பில் வரவேற்று 'கீழ்' செக்ரட்டரிஒருவர், விருந்து நடத்தினுர். பிறகு ஒரு கூட்டு செக்ரட்டரி விருந்து வைத்தார். உங்களுக்கு நான் என்ன மட்டமோ என்று ஒரு பார்லிமெண்டரி செக்ரட்டரி அவர்

களுக்கு இரண்டு தடவைகள் விருந்து நடத்தினர்!"

"இப்படி அடிக்கடி விருந்துகள் நடத்த வேண்டியிருப்பதால், வெளியிடங்களுக்கு வாடகைப் பணம் அதிகம் கொடுக்கவேண்டி இருக்கிறதே என்று கருதி, டில்லி சர்க்கார் மிகப் பிரம்மாண்டமான ஐதராபாத் மாளிகையை வாங்கி, அதை மிகமிக அழகாக அலங்கரித்து வைத்துள்ளது. இருந்தும், யாரும் அங்கு விருந்துகள் நடத்துவதில்லை! வழக்கம்போல, வெளியிடங்களுக்குத்தான் பணத்தை அழுது கொண்டிருக்கிறார்கள்!

*

"என்ன நண்பா! விருந்துகளைப் பற்றிய விபரங்களாகவே கொட்டுகிறாய்"

"விருந்து என்றால் அலட்சியமாகவா எண்ணுகிறாய். சர்க்கார் விருந்து! ஒவ்வொன்றுக்கும் ஆயிரக்கணக்கில் ரூபாய்கள் அழிந்து வருகிறது. 'அண்டர் செகரட்டரி' 'ஜாயிண்ட் செக்ரட்டரி' 'பார்லிமெண்டரி செக்ரட்டரி' 'டிப் செக்ரட்டரி', இப்படி ஒவ்வொரு பெரிய அதிகாரி வைக்கும் விருந்துக்கும் சர்க்கார் பணம் தருகிறதாம்!"

"மனம் கலங்கத்தான் செய்கிறது, எனக்கு"

"இதைக் கேள்"

*

"ஒரு நீராவிப் படகு, ஜமீன்தார் ஒருவரிடம் கிடந்தது, விலை போகாமல். அதை பிரம்மபுத்திராவைக் கடப்பதற்காக என்று இன்சினீயரிங் இலாகாவினர் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினர்கள். ரூபாய் 65780 செலவழித்து, ரிப்பேர் முதலியவைகளும் செய்தார்கள். இவ்வளவு செய்தபின்னரும் படகு ஓடுகிறதா என்றால், இல்லை! அப்படியே கிடக்கிறது!! இனி, அதை ஓடச் செய்யமுடியும் என்கிற நம்பிக்கையே கிடையாது"

"ஒன்பது ஆண்டுகளில்—அதாவது சுதந்திர ஆட்சி மலர்ந்த பிறகு—ஒரு அதிகாரி ரூபாய் 1,52,609க்குமேல் கையாண்டிருக்கிறார்"

"குறைந்த விலைக்கு அரிசி வாங்கித் தருவதாக உள்நாட்டுக் கம்பெனியொன்று முன் வந்தும், வெளிநாட்டுக் கம்பெனிமூலம் 'பேரம்' நடத்தியதில், உணவு இலாகாமூலம் ஏற்பட்ட நஷ்டத் தொகை ரூபாய் மூன்றுலட்சம்"

"அதே மந்திரி சபை, மூன்று மாகாணங்களில் 1000 குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும்படி ஒரு கம்பெனியிடம் 'கண்டிராக்ட்' செய்துகொண்டது. மாகாண சர்க்கார்களையும், அதே கம்பெனியிடம் 'காண்டிராக்ட்' செய்துகொள்ளுமாறு நிர்ப்பந்தித்தது. அதனால், மூன்று மாகாண சர்க்கார்களும், குழாய்க் கிணறுகளுக்காக மேற்படி கம்பெனிக்கு 48 லட்ச ரூபாய்களை அட்வான்சாகக் கொடுத்தன. முடிவு என்னவென்றால், சொன்னபடி அந்தக் கம்பெனி குழாய்க் கிணறுகளை அமைத்துத் தரவில்லை!"

* *

"கேட்கக் கேட்க வெட்கம் விலாவைக் குத்துகிறது, நண்பா"

"ஆமாம்! இந்த அழகில் ஒவ்வொரு இலாகாவையும் கவனிக்க எத்தனை மந்திரிகள் தெரியுமா?"

"ஆமாம்! சட்டமந்திரி படாஸ்கரே சொல்லுகிறார், டில்லியிலிருக்கும் மந்திரிகளின் எண்ணிக்கை எனக்கே தெரியவில்லை என்பதாக"

"இவ்வளவிருந்தும் ஒரே ஊழல் மயம்! இப்படி, வரிப்பணம் கரியாகிறது. இந்த இலட்சணத்தில், நாட்டின் நன்மைகளுக்கு என்று பணம் கேட்டால் இல்லையென்று கைவிரித்து விடுகிறது டில்லி..."

"அனாதை ஆசிரமத்திற்குப் பணம் இல்லை யென்று சொன்னாரே குண்டுப் பிள்ளை, அது போல!"

"ஆமாம், அதுபற்றி பேச வந்து எங்கோ போய்விட்டோமே! ஊழல் மிகுந்த மானேஜருக்கு அவர் ஏன் விருந்து வைக்கிறார், இப்போதாவது புரிகிறதா?"

"புரிய வில்லையே!"

"எங்கே தன்னுடைய ஊழல்களையெல்லாம் அவர் வெளியாருக்கு வெளிப்படுத்தி விடுவாரோ— அப்படி வெளிப்படுத்தி விட்டால் பாரத் கம்பெனியின் பெயர் சிரிப்பாய்ச் சிரிக்குமே— அதனால் தன் கம்பெனி பணம் போனாலும் போகிறதென்று அவரைத் 'தாஜா' செய்ய விருந்து நடத்துகிறார்......"

"அதுபோல........"

"அகில உலகிலும் இருக்கிற பெயருக்கு இழுக்கு வந்து விடப் போகிறது, அதிகாரிகளின் ஊழல்களை எடுத்துச் சொன்னால் தங்களின் தலைக்கும் தீம்பு வந்துவிடப் போகிறது என்று அஞ்சி, அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் விடுகிறார்கள் காங்கிரஸ் மந்திரிமார்கள்"

"அப்படி யென்றால் பாரத் கம்பெனி முதலாளிபோல, பாரதத் தலைவர்களும் அஞ்சவேண்டிய சூழ்நிலை இருக்கிறதென்று சொல்லு......"

"ஏன் இல்லை! முதலில் வெளிநாட்டில் அக்கிரமம் செய்யும் அரசுத்தூதர்கள்மீது நடவடிக்கையெடுத்தால் உலகமே சிரிக்கும்— இரண்டாவது நடவடிக்கையெடுத்தாலும் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் நேருவுக்கு சொந்தக்காரர்களாகவோ வேண்டியவர்களாகவோதான் இருபபார்கள்..."

"சரி! உள்நாட்டில் ஊழல் நடத்துவோரைக்கூட ஏன் கண்டிப்பதில்லை?"

"இங்குமட்டும் என்ன வாழ்கிறதாம். நம்முடைய மந்திரிமார்களே வருமானவரி கட்டாமலிருக்கிறார்களாம். இதுபோல, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு காரியங்கள் ஆகவேண்டியிருக்கிறது. அதிலும், இந்தப் பெரிய அதிகாரிகளை நம்பித்தானே அரசுத்தேரே ஓடுகிறதாம்! அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால், எத்தனை காங்கிரஸ் அமைச்சர்கள் அகப்பட்டுக்கொண்டு விழிக்க நேரும்..."

"அதனால்தான் தட்டிக் கொடுத்துக்கொண்டு போகிறார்களா?"

"குண்டுப் பிள்ளை, அவரளவுக்கு அபபடிச் செய்கிறார்! பாரதரத்னங்கள் அவர்களளவுக்கு இப்படிச் செய்கிறார்கள்"

"குண்டுப் பிள்ளை விருந்து வைப்பதுபோல, நம்ம மந்திரிமார்கள் ஊழல் செய்தவர்களுக்கு எதுவும் நடத்தியதாகத் தெரியவில்லையே"

"அது வேறு நடக்கவேண்டும் என்கிறாயா? இதோ, ஒரு செய்தியைக் கேள்: N. A. S. இலட்சுமணன் என்று ஒருவர், வானொலி டைரக்டர் ஜனரலாக இருந்தாராம். பணம் மோசடி செய்ததற்காக அவரை, விசாரித்து, வேலையிலிருந்து நீக்கினார்களாம்..."

"பரவாயில்லையே! துணிச்சல் பாராட்ட வேண்டியதுதான்"

"அவசரப்படாதே! கொஞ்ச நாட்களுக்கெல்லாம், அவருக்கு முன்னைவிட பெரிய உத்யோகம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்களாம்..."

"பாரத் கம்பெனி முதலாளியை விட மோசமாயிருக்கிறதே, இப்போக்கு!"

"பெருமூச்சு விடாதே உனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லு, இக்கேலிக் கூத்தை..."

★

சீறுவோரே, சிந்திப்பீர்!

[திராவிட நாடு தனியாகப் பிரிந்து வாழவேண்டும்!—என்று நாம் சொல்வதைக் கேட்டதும், 'ஐயோ! ஐயோ!' என்று அலறுவோர் இருக்கிறார்கள்.

பிரிக்கவேண்டும் என்றதும், ஏதோ, திராவிட நாட்டை, இந்திய உபகண்டத்திலிருந்து வெட்டியெடுத்துக்கொண்டு நாம் போக விரும்புவதுபோல இவர்கள் கூப்பாடு போடுகிறார்கள்.

பிரித்துக்கொள்வது என்றதும், வடநாட்டினர்மீது நாம் என்றும் பகைவர்களாகவே வாழ்வோம், வடவரை வீழ்த்துவதையே இலட்சியமாகக் கொள்வோம் என்பது பலர் கருத்து.

சேர்ந்திருந்து எலியும் பூனையுமாக வாழ்வதைவிட, பிரிந்திருந்து நேச நாடுகளாக நாம் நிச்சயம் வாழமுடியும். அப்படி வாழ்கிற புதுயுகமே பொன்னுனது.

இதனுல், முதல் தி. மு. க. மாநில மாநாட்டில்பேசியபோது அப்போதைய தி. மு. க. பொதுச் செயலாளர் வெளியிட்டார், "எப்படி உலக நாடுகளின் நட்பையும் அமைதியையும் பாதுகாக்க ஒரு யு. என். ஓ. (ஐ. நா. சபை) உள்ளதோ அதுபோல, நாம் ஐ.என். ஓ. (இந்திய நாடு சபை) அமைத்துக்கொள்ளலாம். வடநாட்டுக்கு ஆபத்தென்றால், அப்போது அதைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மாயிருக்கமாட்டோம். நம்முடைய நண்பர்கள் என்கிற முறையில் நிச்சயம் உதவிக்குச் செல்வோம்" என்பதாக.

பிரிட்டனின் ஆட்சி அகன்றதால், இந்தியாவும் இங்கிலாந்தும், எலியும பூனையாகவுமில்லை. முன்னைவிட, நட்போடுதான் இருக்கின்றன. இந்த நட்பு, பிரிந்த திராவிடத்துக்கும், மிஞ்சிய இந்துஸ்தானத்துக்கும் ஏற்படாது என்றே யாரே கூறமுடியும்?

'திராவிட நாடு' இலட்சியம் குறித்து கம்யூனிஸ்டுகளின் ஏடு, வழக்கம்போல, தத்துவார்த்தங்களைத் தீட்டியிருக்கிறது!

இந்தச் சமயத்தில், இவ்வாரம் டில்லியிலிருக்கும் ரஷ்ய செய்தி இலாகாவினரின் செய்திக் கதிர் ஒரு கட்டுரையைப் பிரசுரித்துள்ளது.

ரஷ்யா என்றதும் இந்தியாவைபபோல ஒரே நாடு என்றெண்ணுவோர் உண்டு! அவர்தம் பார்வைக்கு, அந்தக் கட்டுரையைச் சமர்ப்பிக்கிறோம்.

தடித்த எழுத்திலுள்ள வார்த்தைகளை அன்பர்கள், கூர்ந்து நோக்கவும். —ஆ-ர்]

★

ரஷ்ய சமஷ்டிக் குடியரசு
யுக்ரைனிய குடியரசு
பைலோரஷ்யக் குடியரசு
உஸ்பெக் குடியரசு
கஜாக் குடியரசு
ஜியார்ஜிய குடியரசு
அசர்பெய்ஜானிய குடியரசு
லித்துவேனிய குடியரசு
மோல்டேவியன் குடியரசு
லாத்விய குடியரசு
கிர்கீஜிய குடியரசு
டாஜிக் குடியரசு
அர்மீனிய குடியரசு
டர்க்மேனிய குடியரசு
எஸ்டோனிய குடியரசு
கரிலோ-பின்னிஷ் குடியரசு

ஆகிய 16 சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகள் அங்கம் வகிக்கின்றன; சோவியத் யூனியனில்.

இக் குடியரசுகள் ஒவ்வொன்றும் அதில் வாழும் **இனத்தவருடைய** பெயரைப் பெற்றது. இவை யாவும் ஒன்று சேர்ந்து, தனியொரு சமஷ்டி அரசாக விளங்குகின்றன. பல்வேறு இனத்தவரும் **இஷ்டபூர்வமாக இணைந்ததின் விளைவாகத் தோன்றியதே** இந்த சமஷ்டி அரசு. **இஷ்டபூர்வமாக ஒன்று சேருவது என்ற கோட்பாடுதான், சோவியத் யூனியனது அஸ்திவாரமாகும். இந்த அடிப்படையில்தான், சோவியத் யூனியன் வளர்ந்து உறுதி அடைந்துள்ளது.** எங்கள் நாட்டிலுள்ள பல்வேறு இனத்தவரின் நட்புரிமையும் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் வளர்ந்து வலிமையுற்று வந்திருக்கிறது.

இந்த ஐக்கியக் குடியரசுகள் யாவும் சம அந்தஸ்து உடையவை. சோவியத் யூனியன் இன்று பலம் வாய்ந்ததோர் மகத்தான சக்தியாக வளர்ந்திருக்கிறதென்றால், அதற்கு இந்த சமத்துவக் கோட்பாடும் மற்றொரு காரணமாகும். **ஆதிக்க இனத்தவரோ, அடிமைப்படுத்தப்பட்ட இனத்தவரோ, சோவியத் யூனியனில் இல்லை. எங்கள் நாட்டிலுள்ள பல்வேறு இனத்தவரின் உறவுகளும், சமத்துவ உரிமைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.**

உதாரணமாக ரஷ்ய சமஷ்டிக் குடியரசை எடுத்துக்கொள்வோம். ஜனத்தொகை அடிப்படையிலும் சரி, பிரதேச அடிப்படையிலும் சரி, **இதுதான் சோவியத் நாட்டிலுள்ள மிகப் பெரிய குடியரசாகும். ஆயினும் ரஷ்ய இனத்தவருக்கு எவ்விதமான விசேஷ உரிமைகளோ, சலுகைகளோ கிடையாது. உதாரணமாக உஸ்பெக் குடியரசைவிட கிட்டத்தட்ட 75-மடங்கு கூடுதலான ஜனத்தொகையும், சுமார் 125 மடங்கு கூடுதலான பிரதேசமும் ரஷ்ய சமஷ்டிக் குடியரசில் உள்ளன என்றபோதிலும், உஸ்பெக் குடியரசிற்குள்ள அதே உரிமைகள் தான், ரஷ்ய சமஷ்டிக் குடியரசுக்கும் உண்டு — அதைவிட கூடுதலான உரிமைகள் கிடையாது.**

இந்த யூனியன் குடியரசுகள் ஒவ்வொன்றும் சோவியத் யூனியனுடைய ஒரு அங்கமாக விளங்குகின்றது. அதேசமயத்தில் இவை சுயேச்சை அரசுகளாகவும் இருந்துவருகின்றன. அகில யூனியன் அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு இஷ்டபூர்வமாக விட்டுக்கொடுக்கப்பட்டுள்ள பிரச்னைகள் தவிர மற்றெல்லாப் பிரச்னைகளிலும், **தத்தம் பிரதேசத்தில் அரசாங்க அதிகாரம் பூராவையும் எவ்வித கட்டுப்பாடுமின்றி நிர்வகிப்பதற்கு யூனியன் குடியரசிற்கு உரிமை உண்டு,**

ஒவ்வொரு யூனியன் குடியரசும் சோவியத் யூனியன் என்ற இணைப்பிலிருந்து பிரிந்து செல்வதற்கு உரிமையுடையது. அவை ஒவ்வொன்றுக்கும் பிரத்யேகமான அரசியல் சட்டம் உள்ளது. மேலும் ஒவ்வொரு யூனியன் குடியரசும் சட்டமியற்றும் உரிமை பெற்றிருக்கின்றது. **இதல்லாமல் இக்குடியரசுகள் ஒவ்வொன்றும் தத்தம் பிரதேசங்களின் பூரண எஜமானர்களாவர். அதாவதுஇக்குடியரசுகளின் அனுமதியைப் பெருமல் இவற்றின் எல்லைகளை மாற்ற முடியாது.** மேலும் இவை விரும்பினல், **அயல் நாடுகளுடன் நேரடியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உரிமை படைத்தவை.**

சோவியத் நாட்டிலுள்ள சகல **இனத்தவரின் சமத்துவ அந்தஸ்தை வலியுறுத்தும் மற்றொரு அம்சத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். தேசிய இனங்களின் சோவியத்தில், எல்லா யூனியன் குடியரசுகளுக்கும், அவற்றின் ஜனத்தொகையின் அளவைப் பொருட்படுத்தாமல், சமத்துவ**

மான பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு, 10 கோடிக்கு அதிகமான ஜனத்தொகை கொண்ட ரஷ்ய சமஷ்டிக் குடியரசிற்கு தேசிய இனங்களின் சோவியத்தில் 25 பிரதிநிதிகள் உள்ளனர்; அதே சமயத்தில் 12 லட்சம் ஜனத் தொகையையுடைய டர்க்மேனிய குடியரசிற்கும் இச்சபையில் அதே அளவு பிரதிநிதிகள் உள்ளனர்.

சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத், ஒரு தலைவரையும், 16 துணைத் தலைவர்களையும் (ஒவ்வொரு யூனியன் குடியரசிற்கும் ஒரு தலைவர்), 15 உறுப்பினர்களையும் கொண்ட ஒரு தலைமைக் குழுவை தேர்ந்தெடுக்கிறது. சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத்தின் கூட்டங்களுக்கு இடைப்பட்டகாலத்தில்அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லா பிரச்னைகளையும் இந்தத் தலைமைக்குழுதான் தீர்மானிக்கிறது. இதன் நடவடிக்கைகள் யாவும் சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியததினால் அங்கீகரிக்கப்பட வேண்டியவையாகும். அதாவது இக்குழு, சுப்ரீம் சோவியத்திற்குப் பொறுப்புள்ளதாகவே இயங்கும்.

எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்களாக உள்ள இனத்தவர்கள் வாழும் சுயாட்சிப் பிராந்தியங்களும், தேசியப் பிரதேசங்களும் யூனியன் குடியரசுகளைச் சேர்ந்தவையாகும். இம்மக்கள் தமது உள் விவகாரங்கள் யாவற்றிலும் சுயாதிகாரம் பெற்றுள்ளனர். இவர்கள் தமது உரிமைகளை, உழைப்பாளி மக்களுடைய பிரதிநிதிகளின் சோவியத் எனப்படும் தேசிய அரசாங்க அதிகார உறுப்புகளின் மூலம் அமுல்நடத்திக் கொள்ளுகின்றனர். யூனியன் குடியரசுகளுக்கும் சுயாட்சிக் குடியரசுக்கும் அளிக்கப்பட்டுள்ளது போலவே, சுயாட்சிப் பிராந்தியங்களுக்கும், தேசிய பிரதேசங்களுக்கும் சோவியத் யூனியனது சுப்ரீம் சோவியத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப் படுகிறது. மேலும் எல்லா சுயாட்சிப் பிராந்தியங்களும், தேசியப் பிரதேசங்களும் தத்தம் சர்க்கார் அலுவலகங்களிலும் இதர நிலையங்களிலும், அங்கு வாழும் மக்களின் தாய் மொழியையே உபயோகித்து வருகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

நிர்வாகி

தனிச் சொத்துரிமை

[டாஸ்]

கேள்வி:- சோவியத் பிரஜைகளுக்கு தனிச் சொத்துரிமை உண்டா?

பதில்:- ஆம்! உண்டு. சோவியத் நாட்டில் தனிப்பட்ட சொத்து என்றால், சோவியத் பிரஜை ஒருவர் தனது சொந்த உழைப்பின்மூலம் மிச்சப் படுத்தும் சொத்தையே அது குறிக்கும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள தனிச் சொத்துக்கும் இதற்கும் அடிப்படையான வித்தியாசங்கள் உண்டு. சோவியத் நாட்டிலுள்ள தனிநபர் சொத்துக்கள், மனிதனை மனிதன் சுரண்டுவதற்குப் பயன்படுவதில்லை.

துணிமணிகள், உணவுப் பண்டங்கள், வீட்டுச் சாமான்கள், மோட்டார் கார் முதலிய பொருள்கள் தனி நபர் உடைமைகளில் அடங்கியவையாகும். காய் கறிகள் பயிரிடுவதற்கும் கால் நடைகள், பசுக்கள், கோழிகள் முதலியவற்றை வளர்ப்பதற்கும் சில்லறை விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்வதற்கும் கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கு தனிச் சொத்தாக நிலங்கள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு சோவியத் பிரஜையும்-ஆணும் சரி, பெண்ணும் சரி-சொந்தமாக வீடு வாங்கிக்கொள்வதற்கும், டவுனிலோ, கிராமத்திலோ சர்க்காரால் வழங்கப்படும் மனைக் கட்டில் சொந்தமாக வீடு கட்டிக்கொள்வதற்கும் உரிமை உண்டு. சொந்தமாக வீடு கட்டிக்கொள்வதற்காக, இலவசமாக மனைக்கட்டுகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்குக் காலவரை கிடையாது. இம்மனைக் கட்டுகளில் எழுப்பப்படும் வீடுகள், அவற்றைக் கட்டியவர்களின் தனிச் சொத்தாகும்.

உண்மையில் சொந்த வீடுகள் கட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் ஆக்கம் அளித்து வருகிறது. சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள விரும்புகிறவர்கள், அரசாங்க பாங்கியிலிருந்து 7 வருடதவணையில் 10,000 ரூபிள்வரை கடன் வாங்கிக்கொள்ளலாம். அனேகமாக தனிப்பட்ட வீடுகள் ரொக்கத்திற்குத்தான் விற்கப்படுகின்றன. ஆனால் சில சமயங்களில் இதற்கு விதிவிலக்காக, இரண்டு மூன்று வருடங்களில் பணம் செலுத்தும் அடிப்படையில் கடனுக்கும் விற்கப்படுவதுண்டு. அரசாங்க பாங்கி இதற்கான ஏற்பாடுகளை செய்கிறது.

சோவியத் அரசாங்கம் சோஷலிஸ்ட் உடைமையை பாதுகாத்து அபிவிருத்தி செய்துவரும் அதே சமயத்தில், பிரஜைகளின் தனிச் சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கும் சட்டபூர்வமான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சோவியத் யூனியன் அரசியல் சட்டத்தின் 10-வது விதி கூறுவதாவது; "வருமானத்திலிருந்து கிடைக்கும் தனி நபர் சொத்தையும், உழைப்பினால் மிச்சப்படுத்தப்படும் சேமிப்பையும், வசித்திடும் சொந்த வீடுகளையும், வீட்டுக்கு உபயோகமான பொருட்களையும், குடும்பத் தேவைகளுக்கான பண்டங்களையும், தனிப்பட்ட சௌகரியத்திற்கும் உபயோகத்திற்குமான பொருள்களையும் தனிச் சொத்தாக பெற்றிருக்கும் உரிமையும், இத்தகைய தனிச் சொத்துக்களை, அவற்றினுடைய உடைமையாளர்களின் வாரிசுகள் அனுபவிப்பதற்கும் உரிமை உண்டு. பிரஜைகளின் இத் தனிச் சொத்துரிமைக்கு சட்டம் பாதுகாப்பளிக்கிறது"

இந்த தனிச் சொத்துரிமைகளுக்கு பங்கம் ஏற்படுமேயானால், (1) சட்ட விரோதமாக அபகரிக்கப்பட்டுள்ள சொத்தைத் திருப்பித் தரும்படியும், (2) தனது தனி உடைமையான எந்தவொரு பொருளையும் உபயோகிப்பதற்கு தடையாகவுள்ளவற்றை அகற்றும்படியும் (3) தனது சொத்துக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கு நஷ்ட ஈடு அளிக்கும்படியும் கோர்ட்டில் வழக்காடுவதற்கு பிரஜைகளுக்கு உரிமை உண்டு. இவ்வாறு பிரஜைகளின் தனிச் சொத்துரிமையை சோவியத் சட்டங்கள் பாதுகாத்திடும் அதே நேரத்தில், தனிப்பட்ட சொத்துக்கள் உழைப்பின்றி ஊதியம் பெறுவதற்கான சாதனமாகவோ, மற்ற மக்களின் உழைப்பை சுரண்டும் கருவியாகவோ மாற்றப்படுவதற்குத் தடை விதிக்கின்றன. ஒருவர் தனது தேவைக்கு அதிகமாகவுள்ள வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விடலாம். ஆனால் வாடகைக்கு விடுவதற்காகவே வீடுகளை வாங்குவது என்பது முடியாது. அவ்வாறு செய்தால், அது சோஷலிஸ்ட் சமுதாயத்திலுள்ள தனிச் சொத்தின் இலக்கணத்திற்கு மாறுபட்டதாகிவிடும்.

★

சாய்ந்த சர்வாதிகாரி

"நேத்ரானந்தமான தடாக, தம்பி, நேபிள்ஸ் நகரம்! அங்கு உன்னை அனுப்பப்போகிறேன் சாதாரணமாக அல்ல மன்னனாக. சம்மதம் தானா?"

"டச்சுக்காரர்களே! என்னுடைய இன்னொரு சகோதரனை, உமது ஆலந்துக்கு அரசனாக ஆக்குகிறேன். அவனுடைய கட்டளைக்கு அடி பணிந்து நீங்கள் நடக்கவேண்டும்."

"என்ன அண்ணா எனக்கு மட்டும் ஏதுமில்லையா, என்று கேட்கிறாயா? கவலையற்க. உனக்காக ஒரு புது நாட்டினையே அமைக்கிறேன். ஜெர்மனியின் ஒரு பகுதி, இன்றுமுதல் தனிநாடாக்கப்படுகிறது. அப்பப்பரப்புக்கு, நீயே இனி காவலன்!"

"தளபதியாரே! என்ன விழிக்கிறீர்? என்னடா, இவ்வளவு நாட்கள் இவனுடன் ஆருயிர்த் தோழனாகயிருந்தோம், நமக்கெந்த நாடும் கிடைக்கவில்லையே என்றா! வீண் சஞ்சலம் ஏன்? இன்று முதல் நீர் தான் ஸ்வீடனுக்கு மன்னன்."

"ஸ்பெயின் மிச்சமிருக்கிறதா? அதற்கும் என்னுடைய சகோதரன் ஒருவனிருக்கிறான். அவன் பேரய் ஆளட்டும்."

*

உற்றார் உறவினர்கள், நண்பர்கள் வேண்டியவர்கள், எல்லோருக்கும் விருப்பம்போல் பதவிகளை அளித்தான்! அவன் விரல் காட்டிய திக்கு கண்டு தண்டனிடத் தயாராயிருந்த ஐரோப்பிய நாடுகள், அவன் கட்டளையை மறுக்கவில்லை; ஏற்றுக்கொண்டன! அதனால், துருக்கி, ருஷ்யா, இங்கிலாந்து; தவிர ஏனைய நாடுகளிலெல்லாம் அவனுக்கு வேண்டியவர்களே, அரசுபுரிந்தார்கள். குடும்பச் சொத்துபோல, ஐரோப்பாவைக் கருதினான் வாய்த்த சந்தர்ப்பத்தை நழுவ விடாது, தன்னுடையவர்கள் ஒவ்வொருவரும் சகல போகங்களையும் அனுபவிக்கச் செய்தான்.

இப்படிச் செய்தவன், சக்கரவர்த்தியின் பரம்பரையோ, என்றெண்ணத் தோனறும். அல்ல, அல்ல; மிகச் சாதாரண போர் வீரன். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவனைப் பிரான்சு தேசத்துக்கே சக்கரவர்த்தியாக்கிற்று! திக்கற்றுத் திண்டாடிய அவன், ஒய்யாரமாகச் சிம்மாசனத்தில் அமரும் வாய்ப்பேற்பட்டது. வாய்ப்பினை, வசந்தகாலம் என்றெண்ணி, வேண்டியவர்களுக்கெல்லாம் வாரியிறைக்கவும் சுகமாக வாழச்செய்யவும் முயன்றானே ஒழிய தன்னுடைய பழைய நிலையினை மறந்தான்.

ஏழையரின் மத்தியிலிருந்து தலைவர்கள் ஆவோருக்கு, இப்படியொருசபலம் ஏற்படத்தான் செய்யும் போலும்! இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு, பிரான்சில் இருந்தவன் இவன். இந்தியாவில், இப்போது அவனைப்போலவே நடந்துகொள்கிறார், 'நம்ம' நேரு! அவன், மாவீரனாகயிருந்ததால், களம்புகுந்து போரிடும் வலிவும் சக்தியும் பெற்றவனாயிருந்ததால், ஒவ்வொரு நாடுகளுக்கும் தன் அண்ணன் தம்பிகளையும் உற்றார் உறவினர்களையும் மன்னர்களாகவே அனுப்பி வைத்தான். நேரு துரைமகனாரால் அனுப்பி வைக்கப்படும் அரசுத்தூதர்களுக்கு 'மன்னர்' பட்டம் கிடையாதே ஒழிய, மணிமுடிதாரிகளை விடச் செல்வாக்குடனும் சிறப்புடனும் தான் வாழ்கிறார்கள்! அக்கா, அக்காவின் மருமகன், ஆருயிர் நண்பன்,— இது போன்றவர்களுக்கெல்லாம், சுதந்திரம் அரும்பியது முதல், நேரு பண்டிதர் காட்டிவரும் பதவிப்பாதை இலேசானதல்ல.

பிரான்சு முழுதுக்கும், சக்கரவர்த்தியான அவன், பிரெஞ்சுக்காரனோ என்றால், இல்லை! பிறப்பால் இத்தாலியன்! மத்யதரைக் கடலிலிருக்கும் கார்சிகா எனும் தீவில் பிறந்தவன். 19-ம் நூற்றாண்டின் இறுதியில், அத்தீவு பிரெஞ்சு மன்னன் வசம் கிடந்தது. அப்போதைய பிரெஞ்சு மன்னர்கள், துடியிடையையும், பவளவாயினையும் சோமபேறி வாழ்க்கையையும் ரசித்துக் கிடந்தார்கள். அவர்களின் கொடுங்கோன்மை தாங்காமல், பிரெஞ்சு மக்களே சீறி எழுச் சிம்மநாதம் செய்துகொண்டிருந்தார்களென்றால், கார்சிகா தீவு மக்கள் மட்டும் சும்மாயிருப்பார்களா? பலர், பிரெஞ்சுப் பிடியினின்றும் கார்சிகாவை விடுவிக்க வேண்டும்என்று வேட்கைகொண்டு பாடுபட்டனர், அந்தப் பொறி, சிறுவனாயிருந்த அவனுடைய இருதயத்திலும், புகுந்தது!

"என்னுடைய கார்சிகா, அடிமைப்பட்டுக் கிடப்பதா?"

"மாற்றானின் வேட்டைக்காடா என் பூமி?"

எனும் கேள்விகள், குடைந்தன மனதில். இராணுவப்பயிற்சிக்காக பிரான்சுக்குப் பெற்றோர்களால் அனுப்பிவைக்கப்பட்ட அவனை, அந்தக் கேள்விகள், வெறியனாகவே ஆக்கிவிட்டன. அக்காலப் பிரெஞ்சு இராணுவப் பள்ளிகளில் பெரும்பாலும் பிரபுக்களின் புதல்வர்களும், சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளைகளுக்குமே இடமளிக்கப்படும்! அவர்களுக்கு மத்தியில் இவன் போய் அகப்பட்டுக் கொண்டான்! கோச்சு வண்டியில் வந்திறங்குவோருக்கும், குபேர சம்பத்து பெற்றவர்களுக்கும், இந்த ஏழையைக் கண்டால் ஏளனமும் கேலியும்தானே பிறக்கும், பள்ளிகளில், அவர்கள் வைத்ததே சட்டம்—ஆசிரியர்களும் அவர்களுக்கு அடங்கி ஒடுங்கி வாழ்ந்தனர். அதனால், இவன் மிகவும் அலட்சியமாக நடத்தப்பட்டான்! அவர்களது மிடுக்கும், அவனை நடத்திய விதமும், எரிந்துகொண்டிருந்த நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போலாயிற்று. எவருடனும் சேராது, தனியாகவே இருக்கலானான். இயற்கையாகவே, நல்ல மூளை வளம் உண்டு, இவனுக்கு. தனிமையும், மூளை வளமும், அதே சமயத்தில் பிரபுப் பிள்ளைகளின் அலட்சியமும் ஒன்று சேர்ந்தால்? பழி வாங்கும் சுபாவமும், அதற்

கான வழிகளைக் காணும் ஆர்வ மும் தானே ஏற்படும். அதனுல், பயிற்சியில் மிகவும் கவனமாக யிருந்து, காலாட் படையில் ஒரு அதிகாரியானுன். 27-வது வயதுக்குள், பிரெஞ்சுப் படை ஒன்றுக்கு தளகர்த்தனுனன்! இந்தக் கட்டத்தில் தான், பிரான்சுநாட்டில் புரட்சி அரும்பி, மன்னனை வீழ்த்திற்று; பிரபுக்களின் கொட்டத்தை அடக்க முனைந்தது. நெடுநாட்களாக அவன் எதிர்பார்த்து வந்த காலமன்றோ, அது? அதனுல், புரட்சிச் சர்க்காருக்குப் பக்கபலமாக இருந்தான்! பிரான்சில் ஏற்பட்ட புரட்சியையும், அங்கு மணிமுடி தரித்த மன்னனும் பிரபுக்களும் படுத்தப்பட்ட பாட்டையும், இங்கிலாந்து நாடு விரும்பவில்லை. எப்படியாவது, இந்தப் புரட்சிக்காரக் கூட்டத்தை மட்டந்தட்டி விடவேண்டும் என்று கருதி, எதிர்த்துக்கொண்டே இருந்தது. இங்கிலாந்து, இந்தியாவுடன் வியாபாரத் தொடர்பு பெற்று, செழிப்பாகிக்கொண்டிருந்த காலம் அது! அதனுல், இவன், இந்திய வியாபார மார்க்கத்துக்கு இடையூறு உண்டாக்க வேண்டுமெனறும், கிழக்கில் அவர்களுடைய சாம்ராஜ்யத்தை கைப்பற்ற வேண்டுமென றும் ஆலோசனைகள் சொன்னுன். அதனுல், புரட்சி சர்க்கார், இவன் வசம் மாபெரும் படையை ஒப்படைத்து மத்யதரைக் கடல் நாடுகளை ஆக்கிரமிக்கும்படிச் சொன்னது. மகிழ்ச்சிகொண்டு, சென்ருன்; எகிப்தை வென்ருன், பாலஸ்தீனம், இவனுக்கு அடிமையாயிற்று. இப்படி இவன் வெற்றிகள் பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், புதிதாக மலர்ந்த பிரெஞ்சு சர்க்கார், மன்னனுடைய கொடுமைகளில் சிக்கித் தவித்த மக்களின் துயரங்களை அகற்ற முடியாமல், சுயநலவாதிகளிடமும் சந்தர்ப்பவாதிகளிடமும் சிக்கித் திணறிக்கொண்டிருந்தது. இதைக் கேள்விபட்டு, படையெடுப்பை நிறுத்திவிட்டு, பிரான்சு திரும்பினுன்.

மக்கள்மனம் எப்போதுமே மெழுகைப்போன்றது! யார் வீரனே, பேரறிஞனே, அவனுல் தமக்கும் தமது நாட்டுக்கும் பெரும்புகழ் வருகிறது என்று சொன்னுல் அவனை ஆண்டவனுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றவும் பூஜிக்கவும் செய்வர். மிடிமைகள் அகன்று, புதிய வாழ்வு, அவனுல் பூக்காதா! என்றும் எதிர்நோக்கத் தயங்காது, மக்கள்மனம். பிரெஞ்சு மக்கள் புரட்சிக்குப பிறகு, புதிய சமூகம் உருவாகும் என்று கனவு கண்டனர்! பலிக்கவில்லை; அதோடு, மன்னன் காலத்தை விட வறுமையும், வேதனையும் 'மக்கள் தலைவர்கள்' என்போரின் காலத்தில் மிகுவதைக்கண்டு கலங்கினர். அப்படிப்பட்டோருக்கு, புதிய வீரன்—வெளிநாடுகளில் பிரான்சின் தீரத்தைக் காட்டிவரும் தளபதி—தென்பட்டான்! அதனுல், இவனுக்கு, பிரான்சில் அமோக வரவேற்பளித்தனர். வாழ்த்தாதாரில்லை! வழிபிறந்தது, வேதனைகள் தீரும், என றுகருதாதார்சொற்பம்! இவன் பிரான்சுக்கு வந்த பிறகு, குடியரசுக் கோட்பாடு, மூடப்பட்டு மூன்றுபேர் வசம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. முதல் நிர்வாகி எனும் பொறுப்பு, இவன் வசம் ஒப்படைக்கப்பட்டது. போதாதா? மக்களின் மத்தியில் தனக்கேற்பட்டிருக்கும் செல்வாக்கையும் நம்பிக்கையையும் கொண்டு விரைவில் பிரான்சுக்கே சர்வாதிகாரியாகி சக்கரவர்த்தியெனும பட்டமும் பெற்ருன். அவன் தான், உலக வரலாற்றில் மாபெரும் வீரன் என்று கருதப்படும் நெப்போலியன்.

*

வீரமும், எதிரிகளை வீழ்த்தும் திறமையும் பெற்றவனுதலால், ஐரோப்பாவை தனது காலடியின் கீழ்கொண்டுவந்தான். பிரான்சு நாட்டில் அவன் வைத்ததே சட்டம்! இட்டதே கட்டளை! மக்களோ. அவனைத் தேவதேவன், என்று கருதலாயினர். "மகாஜனங்களே! நமது பிரான்சின் கீர்த்திக்கொடி எங்கெங்கு பறக்கிறது, பார்த்தீர்களா?" என்ருன். மக்களும், "ஆமாம்! அவனுல், பிரான்சு புகழ் பெற்றுவிட்டது. புனிதன், அவன்" என்று போற்றலாயினர். இங்கு கூட; நேரு அப்படித்தானே சொல்கிருர்—அவரது சகாக்களும் "நேருஜியால், நமது இந்தியாவின் புகழ் அகில உலகிலும் கொடிகட்டிப் பறக்கிறது" என்று எதெற்கெடுத்தாலும் பேசுகிருர்களல்லவா? நெப்போலியன், போர்களால், பிரான்சுக்குப் பல நாடுகளை அடிபணிய வைத்தவன்! அவன் புகழைப் பற்றி எப்படியெப்படி பேசியிருப்பார்கள் அவனுடைய பிரச்சாரப் பீரங்கிகள்!!

இந்தச் சந்தர்ப்பத்தில் தான், அவன் — தன்னைத் தட்டிக்கேட்க யாரும் கிடையாது; தன்னுடைய புகழோ நாட்டின் இண்டு இடுக்கு முதல் எங்கும் விளங்குகிறது; சிறுவர்கள் பூஜிக்கிருர்கள், பெரியவர்கள் பழிக்கிருர்கள், வீரர்கள் அஞ்சுகிருர்கள் — என்கிற நிலை ஏற்பட்டானபிறகு, தலைப்பில் கூறியதுபோல, தான் வெற்றி கொண்ட நாடுகளுக்கெல்லாம் தன்னுடைய சகாக்களையும், சகோதரர்களையும், அரசர்களாக அனுப்பினுன். நேபிள்ஸ், ஆலந்து ஜெர்மனி, ஸ்வீடன், ஸ்பெயின் இப்படி ஒவ்வொரு நாடுகளிலும் அவனுடையவர்கள் அமர்த்தப்பட்டார்கள்! மன்னுதி மன்னர்கள் அரசோச்சிய பாரிஸ் அரண்மனையில், நெபோலியன்—அவனுடைய உற்ருர் உறவினர் ஐரோப்பாவின் ஒவ்வொரு நாடுகளிலும்... இந்த வைபோகம், உண்மையில், அவனை மகிழவைத்திருக்கத்தான் வேண்டும். ஏவலாளிகள் பலர்! எல்லோரும் அவனுடைய வீரம்கண்டு, வெண்சாமரம் வீசுகிருர்கள்! ஐரோப்பாவே நடுங்குகிறது!—இவ்வளவு பெரிய செல்வாக்கை, எதிர்பார்த்தவனு அவன்? அல்ல! அல்ல! எனினும், பெற்ருன். அவன், காட்டிய திக்குநோக்கி, நீட்டிய விரலில் பாயத் தயாராயிருந்தனர் பிரெஞ்சு மக்கள். ஆனுல், இவன் வெற்றிகொண்ட நாட்டினரோ, இவனது போக்கு கண்டு முணுமுணுத்துக்கொண்டு தானிருந்தனர். எவ்வளவுதான் நல்லவர்களாயிருந்தாலும், நல்லாட்சி நடத்தினுர்களானுலும், அந்நியர்கள் என்ருல் அந்நியர்கள் தானே! அதிலும், அனைவரும், நெபோலியனின் உறவினர்களாயிருந்ததால் அருவருப்போடும் பிலிருந்தோர்கூட அதிருப்தியோடு தானிருந்தனர்—இங்கு இல்லையா, நேருபண்டிதர் அனுப்பிவைக்கும் கவர்னர்மீது—அதுபோல!

> தி. மு. க.வின் மகாநாடு தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு பெரிய அரசியல் பிரச்னையைக் கிளப்பி விட்டிருக்கிறது. "பூ! என்ன இவர்கள்?" என்று அலட்சியம் பேசத்தக்க நிலையில் அவர்கள் இல்லை. இதற்கு காமராஜரும் ராஜாஜியும் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் உதாரணமாகும்"
>
> —சோஷியலிஸ்டு

தனித்தனி நாடாக விளங்க வேண்டிய பல பிரதேசங்களை ஒரு கூண்டில் போட்டு அடைத்து, பெரியதொரு உபகண்டத்தை ஒரு நாடெனச்சொல்லி, ஆங்காங்கு அமர்ந்திருக்கும் கவர்னர்களைக் கொண்டு காரியங்களைச் சாதிக்க எண்ணுகிறதல்லவா, டில்லி ஆட்சி? இதுபோலவே, பற்பல நாடுகளாக விளங்கிய ஐரோப்பாவைத் தன் படைபலத்தால் வென்று, அவைகள் அனைத்தையும் தன்னுடையவர்கள் வசம் ஒப்படைத்து, இஷ்டம்போல் ஆட்டி வந்தான் நெபோலியன். அப்படிச் செய்ததில், ஒரு நடவடிக்கைதான், ஐரோப்பிய நாடுகள்யாவும் பிரிட்டனுடன் வியாபாரத் தொடர்பு கொள்ளக் கூடாது என்று கட்டாயப்படுத்தியது. இதனை, தனித்து இயங்கிவந்த ருஷ்யநாட்டு மன்னன் ஜார் மறுத்தான். அவன்மீது போர்தொடுத்தான், நெப்போலியன். ஆனால் மாபெரும் சர்வாதிகாரியான ஹிட்லர் தோல்வியடைய எது காரணமாகயிருந்ததோ அந்தப் பனியின் காரணமாக, நெபோலியனின் படைகள் தோற்றுத் திரும்பலாயின.

மாஸ்கோ நகருக்குள் நெபோலியன் படைகள் நுழைந்தபோது, நகரமே தீமயமாகயிருந்ததாம்! ருஷ்யர்கள், பின் வாங்க நேரும்போது, தம் வசமிருந்த எல்லாவற்றையும் எரித்து விட்டதால், உணவுப் பொருள்களுக்குக் கூட திண்டாடலாயிற்று நெபோலியனின் படைகள். பட்டினியும் பசியும் வாட்டலாயிற்று! இந் நிலையில், மழைக் காலம் வேறு வரவே, பின் வாங்க நேர்ந்தது 2000 மைல்களுக்கப்பாலுள்ள (கிட்டத்தட்ட குமரிமுதல் இமயம் வரையுள்ள தூரம்!) பிரான்சுக்கு. இப்போது ரஷ்யர்கள் பின்னாலிருந்து தாக்கவே, ஆயிரக் கணக்கானோர் பிணமாயினர்! ஐந்து லட்சத்து இருபதினாயிரம் பேர் மாண்டனராம். இவ்வளவு மோசமான தோல்விக்குப் பிறகு அவனுடைய வீரதீரத்தின் மீது, ஐரோப்பிய நாடுகளுக்கே அவநம்பிக்கை ஏற்படலாயின. இந்தச் சமயத்தில் மீண்டும், ரஷ்யாவுடன் போர் தொடுக்க ஒரு மாபெரும் படையைத் திரட்டலானான நெபோலியன். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அவனுக்குக் கட்டுப்பட்ட நாடுகள் முன வரவில்லை. எப்படி முன் வரும்? கட்டிப்போட்ட மான்குட்டிக்கு எவ்வளவு அற்புத உணவுவகைகளை ஊட்டினாலும், அறுத்துக்கொண்டு ஓடத்தானே முயலும்? நெபோலியன், வீரத்தால் வெற்றி கொண்ட தேசங்களை, அடிமையாக வைத்திருக்க விரும்பினானே ஒழிய நேசமாகப் பழகவில்லை! அடிமை—நேசன், இந்த இரண்டு சொற்களுக்குமிடையிலுள்ள வித்யாசங்கள் கொஞ்சமா? நம்மையாளும் டில்லி. நம் போன்றாருடன் நேசமாக இருக்க விரும்பினால், இப்படியா நம்மை எல்லா வழிகளிலும் ஏமாற்றும்? அதிகாரங்களையெல்லாம் தன் வசமே குவித்துக் கொண்டு ஆர்ப்பரிக்கும்! நேசமாக வாழ விரும்பினால், நேரு பண்டிதர், அந்தந்த மாகாணங்களுக்கு போதிய அதிகாரங்களைக் கொடுத்துவிட்டு, ஆபத்து நேரத்தில் உதவிக்கு வருக என்றால் ஓடோடியும் வருவார்கள். அவர்தான், மராட்டியத்தைச் சுட்டுப் பொசுக்குகிறார்! நம்மை, வாயால் சுடுகிறார்! எங்கு போனாலும், அதிகாரக் குரலில் ஆர்ப்பரிக்கிறாரே — இந்த மனப்பான்மை கொண்டோருக்கு, எப்படி ஆபத்து காலத்தில் உதவ மனம் வரும்? நெபோலியனுக்கு உதவ, அவன் வென்ற நாடுகள் எதுவும் முன் வரவில்லை. இந்தச் சமயமாகப் பார்த்து ஸ்பெயினுக்குப் பிரிட்டன் உதவி செய்ய முன் வந்தது. நெபோலியனின் போக்கு கண்டு ஆத்திரமுற்றிருந்த, ரஷ்யா, ஆஸ்திரியா போன்ற நாடுகள் யாவும் கூடின. ஜெர்மனியில் ஐரோப்பிய நாடுகளுக்கும் நெபோலியனுக்குமிடையே மாபெரும் போர் நடைபெற்றது. நெபோலியன், தோற்கடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டான்! அப்போது, அவனால் அரசனாக்கப்பட் அண்ணன் தம்பிகள், உற்றார் உறவினர்கள் எல்லோருடைய கதியும் என்ன ஆகியிருக்கும் என்பதையுமா சொல்ல வேண்டும்?

நிகரெனக்கிங் கெவருமில்லை என்று வாழ்ந்த நெபோலியன், புரட்சிக்குப் பிறகு சீர்கெட்டுக் கிடந்த பிரான்சில் புது வாழ்வு காண வேண்டுமென்று தன் வாழ்க்கையைத் தத்தம் செய்திருந்தால் அவன் நாமம், எவ்வளவோ புகழுக்கு உரியதாயிருக்கும்! அவனோ, தனது திறமை, வீரம், மக்களின் செல்வாக்கு ஆகியவைகளைக்கொண்டு பேரரசை ஆக்கவும், அதன் பெருமையில் வாழவும் முயன்றான்! உற்றார் உறவினர், அண்ணன் தம்பிகள் ஆகியோருக்கு, தனது செல்வாக்கால் உயர்ந்த இடங்களையும் பதவிகளையும் அளித்தான். வெற்றிபெற்ற நாடுகளை, தனது பிரதிநிதி ஆண்டால்தான், தனக்கு ஆபத்துற்ற சமயத்தில உதவ முன்வருவார்கள் என்று தப்புக் கணக்கிட்டான்! அதனால், ஒவ்வொரு நாட்டிலும் வாழும் மக்களின உள்ளத்தில் இடம்பெறத் தவறினான்! அவனுக்கு ஆபத்து வந்தபோது, தனது பிரதிநிதிகளைப் பார்த்தான்—மக்கள், அவர்களை ஓட ஓட விரட்டியதோடன்றி, எவன் மாபெரும் வீரனெனப் போற்றப்பட்டானோ, அம்மாவீரனையே வீழ்த்திக் காட்டினார்கள். இம்மாபெரும் போருக்குப்பின், நெபோலியன், சக்கரவர்த்தி சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டு எல்பா எனும் தீவுக்குக் கொண்டுபோய் சிறை வைக்கப்பட்டான். புரட்சியில் சாகடிக்கப்பட்ட பிரெஞ்சு மன்னனின் தம்பியைக் கொண்டுவந்து அரசு பீடத்தில் அமர்த்தினார்கள்! எல்பா தீவிலிருந்து நெபோலியன் தப்பி வந்ததும், சேனைகளைத் திரட்டிப் போருக்குக் கிளம்பியதும் அவனை வாடர்லூ எனுமிடத்தில் கூட்டு நாடுகள் தோற்கடித்ததும், பிறகு எலினா எனும் தீவில் கொண்டு போய்விட்டதும், ஆகாயத்தையும் மண்ணையும் அண்ணாந்து அண்ணாந்து பார்த்த வண்ணம் பெருமூச்சு விட்டுக்கொண்டே அப்பெருவீரன் செத்ததையும் ஒரு முறை எண்ணிடின், சரித ஆசிரியர்களின் கண்ணிலிருந்து ஒரு சொட்டு நீராவது சிந்தத்தான் செய்யும்.

—"வண்டு"

★

அழியாத ஆணவம்!

பஞ்சாபிலுள்ள அம்பாலாவுக்கருகில் புத்தர் விழா கொண்டாடப்பட்டதாம். கலந்து கொண்ட பஞ்சாப் அமைச்சர் ராமகிஷன் என்பவர், 'இந்துமதம்' பற்றி பேசினாராம் என்ன பேசியிருக்கப் போகிறார்! இந்து மதத்தின் கொடுமைகளால் தான் புதிய மார்க்கம் காண நேர்ந்தது புத்தரால்-என்றுதானே பேச நேரும்!!

தமது மதத்தைக் குறைவுபடுத்தி பேசுகிறார் என்று இந்துமகாசபையினர் சீறிக்கிளம்பி அமைச்சரின் காரை தவிடுபொடி செய்தனராம்—கற்களால். நிகழ்ந்திருக்கிறது 25ந் தேதி.

மலர் 14] 10-6-56 [இதழ் 49

இலங்கை அட்டூழியம்!

நெஞ்சு துடிக்கும் வகையில்' இலங்கையிலிருந்து வரும் செய்திகள் உள்ளன.

பண்டார நாயகாவின் சர்க்கார், சிங்களத்தைமட்டும் அரசுமொழியாக்க முயலுவதைக் கண்டித்து, தமிழுக்கும் சமநிலை தரவேண்டுமெனக் கோரி, அங்குவாழ் தமிழர்கள் அறப்போர் துவக்கினராம், கடைகளை மூடியும், சட்டசபை முன் மறியல் செய்தும். எதிர்ப்பைக் காட்ட உலகம் ஏற்றுக் கொண்ட ஜனநாயக முறைகள் இவை.

எனினும், சிங்களத்தவர்கள், வேதனை விளைவிக்கும் வகையில் பல அடாவடிகளைச் செய்து, தமிழர்களைத் தொல்லைப்படுத்தி இருக்கிறார்கள். இத்துயரத்தை நான் அனுமதியேன், என்கிறார் பண்டார நாயகா!

கொத்தலாவலையை விட இவரது ஆட்சியில், அன்பும் நேசமும் அதிகரிக்கும் என்று இன்னும் நாம் எதிர்பார்க்கிறோம். இந்திய ஆட்சியைப் போல, ஒரே மொழிதான் அரசுமொழியாக விளங்கும் என்று கட்டாய நிலையை உண்டாக்குவது, ஏற்றதல்ல. இலங்கையில், வாழும் தமிழர்கள் தொகை கொஞ்சமல்ல! அவர்களது தலையில், ஆட்சிமொழியாக சிங்களத்தை மட்டும் சுமத்துவது, ஏற்றதுமல்ல!!

அதிருப்தியும், மனக்குறையும் எந்த அரசுக்கும் நன்மை பயக்காது. சீறிடும் சிங்களவர்களைக் கட்டுப்படுத்தி, அன்பையும் நேசத்தையும் உண்டாக்கும் பொறுப்பு ஆள்வோரிடம்தான் இருக்கிறது. இலங்கையின் ஏற்றத்தில் பெரும்பங்கு கொண்டிருக்கும் தமிழர்கள் மீது எரிச்சலையும் ஆத்திரத்தையும் கிளப்பிவிடுவது, வேதனையில்தான் கொண்டு ´டும்.

பண்டார நாயகா, கூறுவதுபோல, இக் கலவரங்களுக்கு அரசியல் எதிரிகள் கூடக் காரணமாகயிருக்கலாம்.

அதற்காக அவதிப்படும் கூட்டம் தமிழர்களாகவா, இருக்க வேண்டும்? அக்கிரமமன்றோ, அது!

★

(6ம் பக்கத் தொடர்ச்சி)

எனும் எதைச் செய்தேனும், தேர்தலில் வெற்றிபெற்றாகவேண்டும் என்ற இழிதன்மையை நாம் கொள்ளமாட்டோம்! தேர்தலில் வெற்றிபெற்றே தீர வேண்டுமே என்ற அரிப்புகொண்டு எதையும் செய்திடும் கீழ்நிலைக்கு நம்மைக் கெடுத்துக்கொள்ளமாட்டோம்.

மாறாக, தேர்தலில் ஈடுபடும் போதும், தூய்மை கெடாமல், பணியாற்றமுடியும்—கொள்கை வழுவாமல் குறிக்கோளுக்காகப் பாடுபட முடியும் என்ற பொறுப்புணர்ச்சியுடனேயே ஈடுபடப்போகிறோம்.

யாரைப் பிடித்தால் வெற்றி கிட்டும்—யாரைப் பிடிக்க என்ன வழி—இது அல்ல, நாம் மேற்கொள்ளப்போகும் தேர்தல் முறை.

எந்தத் தாழ்நிலை சென்றால் வெற்றி கிட்டும் என்ன இழிசெயல் புரிந்தால் வெற்றி ஏற்படும் என்ற எண்ணத்துக்கு ஏகபோக உரிமைக்காரராக, ஆளும் கட்சியே இருந்துபோகட்டும்; நாம் தேர்தலையும் ஓர் தூயபணியாக்கிக் காட்டுவோம்.

எம்முறையில். தேர்தலில் ஈடுபட்டால், நாம் இதுபோது பெற்றுள்ள உள்ளத் திண்மையும் தூய்மையும் கெடாதிருக்கும், என்பதிலேதான் நாம் மிகமிக விழிப்பாக இருக்க வேண்டுமேயல்லாது, முறை கேடுடையதாக இருப்பினும், நெறியை இழந்திடினும், வெற்றி கிட்டினால் போதும் என்ற எண்ணம் நம்மிடம் தலைதூக்க விடோம்!

தேர்தல் வெற்றிகூட எனக்கு முக்கியமல்ல!

தேர்தலில் என் கட்சி தோற்றாலும் கவலைப்படமாட்டேன்.

தேர்தலில் வெற்றிபெற வேண்டுமே என்பதற்காக, எதையும் சகித்துக் கொள்ள வேண்டும், எதற்கும் இடமளிக்க வேண்டும் · எவர் செய்யும் இழி செயலையும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை எவருக்கும் எழலாகாது.

தேர்தலில் வெற்றி பெறுவதைவிட, நாட்டில்தலைவிரித்தாடும் நாசசக்தியை, பலாத்காரத்தை, வெறியாட்டத்தை, ஒடுக்குவது ஒழிப்பதுதான் எனக்கு முக்கியம்.

ஒகோ! இதை விளக்கவும் வேண்டுமா! கையாலாகாதவர்கள் தானே, சிச்சி! பழம் புளிக்கும் என்பார்கள். அதுதான் இது—என்று கூறுவர், சிலர், விளக்கம் பெறுமுன்பு.

டாட்டாவும் பிர்லாவும் காத்துக் கிடக்க, ஐசனேவர் டாலர்மழை பொழியபிரிட்டன் பரிவுகாட்ட,மாஜி மன்னர்கள் சாமரம் வீச கோடி கோடியாகப் பணம் காலடியில் கொட்டிக் கொடுக்க கனதனவான்கள் மந்தை மந்தையாக முன் வர, கொலு வீற்றிருக்கும் நேரு பண்டிதர் கூறுகிறார் இது போல்!! சென்ற கிழமை!!

அவர் எந்தச் சூழ்நிலையில் கூறினார் என்பது வேறு விஷயம். அவர் நோக்கம் உண்மையில் இதுதானா என்பதும் விவாதத்துக்கு உரிய பிரச்சினை. இதே கருத்தை, நேரு. வழக்கப்படி, வேகமாக மாற்றிக்கொள்ளாமலிருக்கப்போகிறாரா என்பதும் வேறு விஷயம். **நாம் இங்கு கவனிக்க வேண்டியதெல்லாம் ஒருவர், மிக முக்கியமான பிரச்சினைக்கு மனதில் இடம் கொடுக்கும்போது, தேர்தல் வெற்றிபற்றிகூட இரண்டாந்தரம், மூன்றாந்தரமாகத்தான் எண்ணுவார் என்பதுதான்.**

கற்கள் பறந்தன! கார்கள் நொறுங்கின!!

செருப்புகள் பறந்தன! பற்கள் உதிர்ந்தன!!

போலீசார் தாக்கினர்! மக்கள் போலீசைத் தாக்கினர்!!

தலைவர்கள் புத்தி கூறினர்! மக்கள் அவர்களுக்கே புத்தி புகட்டக் கிளம்பினர்!!

நேரு பேசினார்! மக்கள் அவரை ஏசினர்!!

பம்பாயில் சென்ற கிழமை, இவ்விதமான 'ரகளை' நடைபெற்றது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்துக்குச் சென்றிருந்த காங்கிரஸ் தலைவர்கள் தலை தப்பியது தம்பிரான் புண்யம் என்பார்களே, அந்நிலை பெற்றனர்.

உங்களை என்ன செய்யவிரும்புகிறோம் தெரியுமா? தெரிந்து கொள்ளுங்கள், என்று எடுத்துக் காட்டுவதுபோல, கதர்க் குல்லாய் தரித்த காங்கிரஸ்காரர்போல் தயாரிக்கப்பட்ட பொம்மைகளை நெடுஞ்சாலைகளில் தூக்கிவிட்டுத் தொங்கவிட்டனர்!

பட்டில் பட்ட பாடு சொல்லி முடியாது.

மொரார்ஜிக்குப் பலத்த அடி.

காந்திக் குல்லாய் போட்டவர்களுக்கெல்லாம் பெரும் ஆபத்து!

வெடிகுண்டுகளைக்கூட வீசினர்! வெறி பிடித்தவர் போல், போலீஸ் வளையங்களைப் பிய்த்துக்

கொண்டு, தலைவர்களைத் தாக்க ஓடினர்.

ஐம்பதினாயிரம் மக்களுக்குமேல் இருக்கும், ஆர்ப்பாட்டக்காரர் தொகை.

பம்பாய், மராட்டியருக்குக் கிடையாது என்ற அநீதியை எதிர்த்து நடத்தப்பட்டு வரும் கிளர்ச்சி பலாத்கார உருவெடுத்தது—காங்கிரஸ் தலைவர்கள் கதிகலங்கிப் போயினர்.

நேரு பண்டிதர் மட்டும்தான், தாக்கப்படவில்லை—என்று பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. இவ்வளவு கொந்தளிப்பு, எரிச்சலுக்கிடையேயும், நேரு பண்டிதரிடம் அன்பும் மரியாதையும் காட்டத் தவறவில்லையே மக்கள், மொரார்ஜியும் பட்டீலும் படாதபாடு படுத்தப்பட்டனர், காங்கிரஸ் தலைவர்கள் பலரும் இழிவாக நடத்தப்பட்டனர், என்றாலும், ஆத்திரம் கொண்டு பலாத்காரத்தில் ஈடுபட்ட நேரத்திலேயும், பண்டிதர் பார்புகழ் தலைவர், அவரிடம் பரிவும் மதிப்பும் காட்டத் தவறக் கூடாது என்று மராட்டிய மக்கள் கருதினரே, இஃதன்றோ செல்வாக்கின் மகத்துவம் என்று நான் எண்ணி மகிழ்ந்தேன், நேரு பண்டிதருக்குத்தான ஒரு தொல்லையும் ஏற்படவில்லை என்று செய்தி படித்தபோது. ஆனால், தம்பி, அடுத்த வரியைப படித்ததும், மகிழ்ச்சி அல்ல, சிரிப்பே வந்தது; நேரு பண்டிதருக்குமட்டும்தான் ஒரு தொல்லையும ஏற்படவில்லை—என்பதற்குக் காரணம் என்ன தெரியுமா! கலகம் ஆரம்பமாவதற்கு அரைமணி நேரம் முன்னதாகவே நேரு கொட்டகைக்குச் சென்றுவிட்டாராம்!!

மக்கள் ஏமாந்தனர் என்று வேறோர் இடத்தில் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. கருப்புக்கொடி காட்ட மக்கள் கூடினராம், நேரு பண்டிதரோ, அவர்கள் நுழைவு வாயிலில் இருந்தது தெரிந்து, கொல்லைப்புறமாகக் கொட்டகைக்குள் நுழைந்து, கருப்புக்கொடி ஆர்ப்பாட்டக்காரர்களை ஏமாற்றிவிட்டாராம்!!

இவ்விதமெல்லாம் இடர்ப்பட்டும் இழிவுபடுத்தப்பட்டும், மனம் நொந்த நேரு பண்டிதர், 'உலகத்துக்கு உபதேசம் செய்கிறேன் நான்! வெளிநாடுகள் சென்று சாந்தம், சீலம் போதிக்கிறேன். என் நாட்டிலேயோ நிலைமை இங்ஙனம் இருக்கிறது. இந்த இலட்சணத்தில் நான் எந்த முகத்தை வைத்துக்கொண்டு வெளிநாடுகள் சென்று பேசுவது? என்று கேட்கிறார்.

இந்த நிலையில் பேசும்போது, நேரு பண்டிதர், தேர்தல் வெற்றி பற்றிக் கவலை இல்லை, பலாத்கார வெறி உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டும் — அதுதான் முக்கியம் என்று கூறுகிறார்.

காரணம் எதுவாகவேனும் இருக்கட்டும்—ஒரு குறிப்பிட்ட இலட்சியம் நமது நன்மதிப்பையும் அக்கறையையும் பெற்றுவிட்டால், தேர்தல் வெற்றியிலே ஆர்வம் காட்டுவதைவிட, அந்த இலட்சியத்திடம்தான் அதிகமான அக்கரை காட்டவேண்டும் என்ற தத்துவத்தை நேரு பண்டிதரே கூறுகிறார்.

தம்பி! நாம் மேற்கொண்டுள்ள இலட்சியம் மகத்தானது.

அதனை எடுத்து விளக்கவும், அதற்கு வலிவு தேடவும், அது வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு வளரவும், தேர்தல காரியம் பயன படவேண்டும் என்பதிலேதான், நமக்கு மிகுந்த அக்கரை இருக்தல் வேண்டும்; வெறும் தேர்தல் வெற்றிக்காக, இலட்சியத்தை மாற்றிடும் போக்கு ஆகாது—கூடாது—எழாது.

எத்தனை எத்தனை இல்லங்களிலும் இதயங்களிலும் நமது இலட்சியத்தைப் பதியவைப்பதற்கு, இந்தத் தேர்தலைப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியமே தவிர, என்னென்ன சூது சூழ்ச்சி, வளைதல் நெளிதல் நடாத்தி வெற்றி தேடுகிறோம் என்பது அல்ல. ஆம், தம்பி! இதை நிச்சயமாக்கிக்கொள்ளவேண்டும், இந்தப் புதிய கட்டத்தில்.

தேர்தலில், எப்படியேனும் வெற்றிபெற்றாகவேண்டும் என்ற ஆசைக்கு நாம் ஆட்பட்டுப்போய், அதற்கான வழிதேடுவது என்று இறங்கினால், தம்பி, நிச்சயமாகக் கூறுகிறேன், மாற்றார்கட்கும் சொல்கிறேன், இயலாத காரியம் அல்ல.

நாளையிலிருந்து துவங்கி தட்சிணப் பிரதேசம் எனும் திட்டத்துக்கு ஆதரவுகாட்டுவது என்று ஆரம்பித்தால் போதும், மெயிலும் இந்துவும், மித்திரனும் மணியும், மேல்விழுந்துகொண்டு ஆதவர காட்டும், நமது தோழர்களின் படங்கள் பளிச்சிடும், நமது ஊர்வலக் காட்சிகள் படமாகும், நமது பேச்சுகள் அந்த ஏடுகளின் தலை

முகப்பில்

தி. மு. க. மாநில மாநாட்டில் விருதுபெற்ற மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார்.

யங்கங்களுக்கு உயிரூட்டும்! திடீர்ப் பிரமுகர்களே ஆகிவிடலாம்! இந்த நிலைமையை நாம் அறியாமலும் இல்லை, இந்த வித்தை செய்திட அதிகச் சிரமமுமில்லை!

ஆச்சாரியாரும் ஆசைத் தம்பியும், சுப்ரமணியமும சிற்றரசும, ஒரே மேடையில்!

கல்கியில், நமது கழகத்தின் புத்தி கூர்மைக்குப் பாராட்டும, ஆனந்த விகடனில் நமது ஆற்றலுக்கு நற்சான்றும், கட்டுரையாய், கவிதையாய் வடிவம் காட்டும் இம் மட்டோ! கருநாடகக் கனதனவான்களும், கேரளத்துப் பெரியவர்களும், ஆதரவு தருவர். பணம? ஏ! அப்பா! கேட்டும அளவுக்கு!! வெற்றி—பலமுனைகளில்.

தேர்தலில் வெற்றி கிட்டச்செய்வது ஒன்றுதான் நமது வேலை என்றால், இதுபோல் எண்ணற்ற ஏற்பாடுகள், கண் சிமிட்டிக் கொண்டு, நிற்கின்றன. நாம் கைகாட்டினால், இடை நெளிய, ஆடை நெகிழ, புன்னகை பூத்திட ஓடிவரும் 'மாய மோகினிகள்' ஏராளம். ஆமாம், தம்பி, நாம் மட்டும், சபலத்துக்கு இடமளித்திடச் சம்மதித்தால் போதும்.

ஆனால் நாம், தேர்தலில் வெற்றி பெற வழி என்ன என்று மட்டும் ஆராயும, அற்ப ஆசைக்காரரல்ல; நமது நோக்கம், நாம எந்த இலட்சியத்துக்காகப் பணியாற்றுகிறோமோ அஃது, கைகூடும் வாய்ப்பு வளரத்தக்க வகையில் எப்படி இந்தத் தேர்தல் நேரத்தைப் பயன்படுத்தலாம் என்பது தான், இதனை நாம் மறக்கவும் கூடாது—மறைத்திடவும் தேவையில்லை.

தேர்தல் வெற்றி ஒன்றை மட்டுமே, நமது நோக்கமாகக்கொண்டால், எத்தனையோ எதிர்பாராத அணைப்புகளும் ஆதரவுகளும் பெறமுடியுமே.

எடுத்துக் காட்டுக்காகக் கூறுவதற்குக் கூட எனக்குத் தம்பி, கூச்சமாக இருக்கிறது, எனினும் மந்தமதியினருக்கும் விளங்கட்டும் என்பதற்காகக் கூறுகிறேன், நாளையிலிருந்துதொடங்கி அமெரிக்காதான் அகில உலக ஜனநாயக ரட்சகன்-அந்த நாட்டுடன் இந்திய

சர்க்கார் பட்டும் படாத முறையில் உறவு கொண்டாடுவது சரியல்ல, நேசமும் பாசமும் வளரவேண்டும், ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டும்—என்று பிரசாரம் செய்கிறோம் என்று வைத்துக் கொள், தம்பி! அமெரிக்க ஏடுகள் அவ்வளவுமல்லவா, நமது பிரச்சார சாதனங்களாகிவிடும்! ஒரே கிழமையில், நாம் அகில உலக அறிமுகம் பெற்றவர்களாகி விடலாமே!

நெடுந் தொலைவுகூடப் போக வேண்டாம்; தொழில்களைச் சர்க்கார் நடத்தினால், உற்பத்தி ஒழுங்காகப் பெருகாது, செல்வம் வளராது. தரம் இருக்காது — எனவே தனிப்பட்ட முதலாளிகளிடமே இருக்கவேண்டும் என்று பேசினால் போதாதா, சென்னையில் இன்றுள்ள 'அறிவகம்' ஏன் நமக்கு, **கோவையில் 'லட்சுமிகிரஹம்'** கட்டிவிடலாமே!

தேர்தலில் வெற்றி பெறுவது தான், நாம் இந்த ஏழெட்டு ஆண்டுகளாகப் பாடுபட்டதற்கு ஈடாக நாம் எதிர்பார்க்கும் பலன், என்றால், வழி இல்லாமற் போகவில்லை தம்பி! அந்த வேலையும் மெத்தக் கடினமானதல்ல.

நாம் அதற்காக அல்ல, அரும் பணியாற்றி வருவது; தந்தையர் நாடு தனி அரசு பெறவேண்டும் என்பதற்காகப் பணியாற்றி வருகிறோம் — தேர்தலையும் இந்தப் பணியிலே ஒரு கட்டமாகக் கொள்கிறோம்.

தேர்தலை, தம்பி, பல அரசியல் கட்சிகள் அறுவடைக் காலம் என்று கொள்கின்றனர் நாமோ, தேர்தலையும் உழவுக்காலமாகவே கொள்ளுகிறோம்; தேர்தலை வாய்ப்பாகக்கொண்டு, மக்களின் நெஞ்சத்தில் நற்கருத்துக்களைத் தூவிடும் நற்பணியில் ஈடுபடப்போகிறோம். எனவே நமக்கு தேர்தலில், நாம் எத்தனை இடங்களைக் கைப்பற்றுகிறோம், என்பதல்ல, பார்க்கவேண்டிய கணக்கு — நாம் ஏதோ அந்தக் கணக்கு காணவே துடிப்பது போலவும், அந்தக் கணக்குப் பொய்த்துப்போனால் நமது கழகத்தின் உயிர் போயே விடும் என்றும், வெகுண்டெழுந்தான் பிள்ளை வீறுப்புப் பேசுகிறாரே, அது, நமது நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை, திகிலால் அவர் இழந்ததன் விளைவு—வேறென்ன!

தேர்தல் என்றால் என்ன சாமான்யமா?

பண பலம்
பத்திரிகை பலம்
ஜாதி அபிமானம்
வலைபோட்டுப் பிடிக்கும்-
வித்தை.

இப்படி எத்தனையோ தேவைப்படுமே—இவர்களிடம் ஏது? என்று கேட்கிறார், வெகுண்டெழுந்தான் பிள்ளை. நாம் தம்பி, கூறத்தக்க பதிலெல்லாம்,

அப்பழுக்கற்ற கொள்கை, அசைக்கொணா ஆதாரங்கள், இதனை எடுத்துரைக்கும் ஆற்றல்.

ஓயாது உழைத்திடும் பண்பு. விளைவு பற்றி அஞ்சாமை.

இந்தப் பலம் எம்மிடம் இருக்கிறது—போதும் என்பதுதான்.

வானம் இடிவதுபோலக் கூவுகிறார்களல்லவா கீதா வாக்கியமென்று, வடமொழியில், **நிஷ்காமகர்மம்** என்று — (பலனைப் பற்றிய கவலையற்று கடமையைச் செய்வது) அது இதுதான்! இதற்கு இந்துவில் இருபது தலையங்கம் ஆதரவாக வந்தே ஆக வேண்டும் என்று 'விதி' யொன்றும் இல்லை! 'மெயில்' தன் தலையங்கத்தில், தி. மு. க. தேர்தலில் ஈடுபடுகிறது —இது கவனிக்கத்தக்க புது பிரச்னை ஆனால். தேர்தலில் வெற்றி பெறுவதற்கான **வசதிகள்** தி. மு. க.வுக்கு என்ன இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் எல்லாம்—என்று ஏளனமும் எரிச்சலும், திகிலும் ஏக காலத்தில் தொனிக்கும் விதமாக எழுதுகிறது.

வசதிகள்!! — தம்பி! பொருள் தெரிகிறதா? போடியும் போலாவரமும், ஜெமினும், ஆலையும்,பாங்கும், பாரத் சேவா சமாஜமும், எம்மிடம் — பைத்யக்காரர்களே! உம்மிடம் இந்த **வசதிகள்?** உண்டா என்பதுதான பொருள்.

நமது ஏழ்மையும் எளிமையும்—இவற்றினும் பாழ் படாத நமது தூய்மையும் நமக்கு வெற்றிதரப் போதுமானவை என்று நான் திடமாக நம்புகிறேன், என்பதைக் கூறினால், தம்பி, பணத்தையும் பண்பு கெட்டதனத்தையும் நம்பிக் கொண்டிருக்கும் அவர்கள் நம்ப மாட்டார்கள். ஆனால், நமக்கு நமது ஏழ்மைதான் வலிவளிக்கப் போகிறது,

ஐயா! இவ்வளவு இலட்சத்தை வாரி வாரி இறைத்து விட்டோமே, வெற்றியோ தோல்வியோ, என்ன ஆகிறதோ? — என்ற பதைப்பு நமக்கு ஏற்படவே செய்யாது, நாம செலவிடப்போவது ஏதுவுமில்லை — அந்த வசதி நிச்சயமாக நம்மிடம் இல்லை.

நாம் ஊராருக்கு உண்மையை எடுத்துரைக்கப் போகிறோம்.

அதனை ஓயாது எடுத்துரைக்கப் போகிறோம்.

ஆளவந்தார்கள் செய்துள்ள அக்ரமங்களை அம்பலமாக்கப் போகிறோம்.

இதனை அஞ்சாது, அயராது செய்திடப்போகிறோம்.

மக்களை, நித்த நித்தம் சந்திக்கப் போகிறோம் — நமக்கும் மக்களுக்கும் இடையே தேர்தல் தரகர்கள் இருக்கப்போவதில்லை.

ஊராள வந்தவர்கள் நடத்திடும் ஊழலை விளக்கப்போகிறோம்—அதனால் கோடிக் கணக்கில் பணம் விரயமாவதை எடுத்துக் காட்டப் போகிறோம்; அந்தப் பணம், உமது வியர்வை, இரத்தம், கண்ணீர், என்பதை மக்கள் அறியும்படிச் செய்யபபோகிறோம்.

தமிழ் மரபுக்கு மாசும், இனத்துக்கு இழுக்கும், உரிமைக்கு ஊறும், உடைமைக்குக் கேடும் விளைவித்த துரோகச் செயலை எடுத்துக் காட்டப்போகிறோம்.

மக்களைக் காணவே இந்த மகானுபாவர்கள் அஞ்சிடத் தக்கதோர் நிலையை உருவாக்கிக் காட்டப் போகிறோம்

இதற்கு நமக்கு இரும்புப் பெட்டியும் கருமபுத் தோட்டமும், தேவையில்லை, இதய சுத்தியும் அஞ்சாத தன்மையும் போதும் — அக்கருவூலம் நமமிடம் ஏராளம்!

தம்பி! பணம் இல்லாததாலேயே, பட்டுப்போவோம் என்று மனப்பால் குடிக்கட்டும்—பட்டால் தான் அவர்களுக்குத் தெரியும்!!

காந்தியார் பெயர் கூறிக் 'கனம்,' ஆனவர்கள் காந்தீயத்தைக்கொன்றொழித்த காதையை மக்கள் அறியச் செய்வோம்.

'அகில இந்தியா' எனும் அலங்காரம் பேசுபவர்கள், திரு இடத்துக்கு, ஐந்தாண்டுத் திட்டத்தில், இழைத்துள்ள வஞ்சகத்தை, வரண்ட தலையினர் அனைவரும் உணர்ந்திடச் செய்வோம்.

தொட்டது துலங்காத துரைத்தனம் நடாத்துபவர்களல்லவா நீங்கள். தோலிருக்கச் சுளை விழுங்கிப் பேர்வழிகளல்லவா நீங்கள். சிந்தையில் கள்விரும்பி சிவசிவா என்பதுபோல், வந்தே மாதரம் என்பார் வாய்ச்சொல்லில் வீரரடி என்று பாரதியார் பாடியது உங்கள் பொருட்டல்லவோ, நீங்கள் குடிபுகுந்துவிட்டீர்கள் என்பதறிந்துதானே, காங்கிரசைக்

கலைத்துவிடுக என்று காந்தியாரே கட்டளையிட்டார். ஐந்தாண்டுத் திட்டமூலம், பக்ராநங்கல், சிந்திரி, ஹிராகூட் என்றெல்லாம் அமைத்து வடநாட்டைச் சீமையாக்கி திராவிடத்தைத் தேய வைக்கும் தீயோரல்லவா நீங்கள். வடக்கே விஞ்ஞானம், இங்கே பஜனைஞானம். வடக்கே ஆலைகள், இங்கே அம்பர்ராட்டை! வடக்கே அணு ஆராய்ச்சி, இங்கே அப்பளத்தொழில். வடக்கே அதிகாரம், இங்கே காவடிதூக்குவோர். இப்படி ஓர் இழி நிலையை ஏற்படுத்தியவர்களல்லவா நீங்கள். தேவிகுளம் பீர்மேடு, தமிழருக்குரியது என்று நாடே கூற, நல்லோர் எடுத்துக்கூற, ஆமாம் என்று தலையையும் அசைத்துவிட்டு, பிறகு இஞ்சி தின்றுவிட்டு இளித்திடும் மந்திபோல் உம்மை வடவர் ஆக்கிட, மேடாவது குளமாவது என்று கேலிபேசிய, தமிழ் இனத் துரோகிகளல்லவா நீங்கள். தமிழ்நாடு என்று பெயர் சூட்டக்கூட, சூடு சொரணையற்றுப் போனவர்களல்லவா நீங்கள். ஓட்டா வேண்டும் ஓட்டு! ஏனும்? எம்மை ஓட்டாண்டியாக்கினது போதாதா—என்று மக்கள் கேட்கப் போகிறார்கள்—கேட்கச் செய்வோம்,

இதற்கெல்லாம் தம்பி, நமக்கு இலட்சங்கள் தேவையில்லை, கொள்கையில் உறுதி இருந்தால் போதும்.

> "தி. மு. க.வில் நல்ல இளைஞர் பலர் இருக்கிறார்கள். உற்சாகமும், நல்ல நாவன்மையும் அவர்களுக்கு இருக்கிறது. மேடையிலே கொட்டி முழக்கவும் அவர்களுக்குத் திறமை இருக்கிறது. இது மட்டுமல்ல கட்டுக்கோப்பும், படை பலமும்கூட அவர்களுக்கு இருக்கிறது. தேர்தலில் கலந்துகொள்ள இதற்குமேல் என்ன வேண்டும் என்று சுலபமாகக்கேட்டுவிடலாம். விடைகொடுப்பது அவ்வளவு சுலபமல்ல. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பெரிய தடை ஒன்று இருக்கிறது என்பதை எவரும மறந்துவிடக்கூடாது."
>
> "தி. மு. க. வின் முடிவு காங்கிரசுக்கு ஏற்பட்ட எதிர்க்கட்சி போராட்டம்மட்டுமல்ல. தி. க.வுக்கும், தி. மு. க.வுக்கும் ஏற்படும் புலப்பரீட்சை போராட்டமாகவும் விளங்கப் போகிறது."

சிவாஜி எனும் ஓர் காங்கிரஸ் ஏடு—எழுதுவது இது.

பலருடைய ஆசை இது—பலர் இதற்காகத் தவமாய்த் தவமிருக்கிறார்கள்.

தி. க. வைக் கொண்டு தி. மு. க. வைத் தாக்குவது என்ற ஓர் நப்பாசை இருந்து வருகிறது.

இதிலும் வெகுண்டெழுந்தான் பிள்ளை ஏமாறத்தான் போகிறார்.

பட்டம் பதவிக்காகவோ, பணத்தாசை பகட்டுக்காகவோ இவர்கள் தேர்தலில் ஈடுபடாமல், பொதுமக்களுக்குப் பணி புரிவதற்காகவே தேர்தலுக்கு நிற்கிறார்கள் என்று எனக்குப் பட்டால், நான் ஆதரிப்பேன் — என்று, தி. மு. க. குறித்துப் பெரியார் பேசியதாக 'தமிழ் நாடு' இதழில் காண்கிறேன்.

நாம் தேர்தலில் ஈடுபடுவது, தூய நோக்குடன்தான் என்பதை நாம், விளக்கமாக எடுத்துக்கூறியபடி இருப்போம்—பெரியாரின் பேராதரவு நமக்குக் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் பணிபுரிவோம்.

நப்பாசைக்காரர்கள் தூபமிட்டு, பெரியாரின் தி, க. வைக்கொண்டு நம்மை எதிர்க்க வைக்கிறார்கள் என்றே வைத்துக் கொள், தம்பி, நமக்கென்ன, அதனால் இழிவு என்றா எண்ணுகிறாய்!! இல்லை! இல்லை! நான் அதனைப் பெறற்கரிய பேறு என்றே கொள்வேன்.

பெரியார், நமது போர்த்திறனைக் கண்டு களிப்படையினும், அடையாது போயினும், காணவேண்டும் என்றே நான் பெரிதும் விழைகிறேன்! காங்கிரசுடன் நாம் தேர்தல் களத்தில் போரிடுவதைக் கண்டிடும்போது பெரியார், என்னதான் நம்மிடம் பெருங்கோபம் கொண்டிருப்பினும் நாம் திறமையுடன் காங்கிரசை எதிர்த்து வீழ்த்தினால் மகிழாதிருக்க முடியாது! அவர் அளித்த ஆற்றலையன்றோ, நாம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம்!!

தித்தன் எனும் தன் தந்தையிடம், மனவேறுபாடு கொண்ட கோப்பெருநற்கிள்ளிஎனும் மன்னர் மகன்பற்றிய செய்யுளொன்று புறநானூற்றில் உளது.

தந்தையும் மகனும், வேறாயினர்—கோப்பெருநற்கிள்ளியிடம் தந்தை தொடர்பு கொள்ளாது தனித்திருந்தனர்.

கோப்பெருநற்கிள்ளி கட்டிளங்காளை. போரில் வல்லான். அவன் ஒரு சமயம், முக்காவல் நாட்டு ஆமூர் எனும் இடத்தே, மல்லன் ஒருவனைப் போரில் வென்றான்! அதனைப் பாராட்டி, சாத்தந்தையார் எனும் புலவர் பெருமகனார் பாடியது, என் நினைவிற்கு வருகிறது—தேனாய் இனிக்கிறது.

மற்போரினைக் கண்டு களித்தார் அப்புலவர். மல்லன் வலிவுமிக்கவன்; கோப்பெருநற்கிள்ளியின் மார்பின் மீது உட்கார்ந்துகொண்டு அழுத்துகிறான்; கிள்ளி' அந்த அழுத்தத்தை அகற்ற, மல்லனுடைய தலையையும் காலையும் வளைத்திழுத்து ஒடித்துத் தோற்கடித்தான். பசி மிகுந்த யானை, மூங்கிலைப்பற்றி இழுத்து ஒடிக்குமே, அதுபோலிருந்ததாம், கிள்ளையின் மற்போர் வகை, அதைப் பாராட்டிய புலவர்,

நல்கினும் நல்கானுயினும்

'காண விரும்பினாலும் விரும்பா விட்டாலும்.'

வெல்போர்ப்பொரல் அருந்தித்தன் காண்க!

போரில் வெல்லும் திறன் படைத்தவனும், எதிர்ப்பாரற்ற வலிவுடையோனுமாகிய, கிள்ளியின் தந்தையாம் தித்தன் காணபானாக!

என்று பாடுகிறார்.

தந்தையும் மகனும் மனவேறுபாடு கொண்டவர்தாம்—ஆயினென்!

தத்தனும் கிள்ளியும் வேறு வேறு இடத்திலேதான் வாழ்கின்றனர். எனினும் மகனுடைய மற்போர் வெற்றியைக் காண்பதன்றோ, தந்தைக்குக் கிடைத்தற்கரிய பேறு! எனவே, கிள்ளியின் வெற்றியைத் தந்தை காண வேண்டும்—அவருக்குக் காட்சி களிப்பளிப்பினும், அளித்திடாது போயினும் கவலையில்லை, கண்டால் போதும் என்கிறார் சாத்தந்தையார்!

> இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
> மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
> ஒருகால் மார்பொதுங் கின்றே; ஒருகால்
> வருதார் தாங்கிப் பின்ஒதுங் கின்றே
> நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்ப்
> போரருந் தித்தன் காண்கதில் அம்ம
> பசித்துப்பணை முயலும் யானை போல
> இருதலை ஒசிய எற்றிக்
> களம்புகும் மல்லன் கடந்தடு நிலையே—
>
> —புறநானூறு 80.

தம்பி! கடினமாக இருக்கிறதா—சிறிதளவு எளிதாக்க முயல்கிறேன்.

ஆமூரில் வலிமை மிக்க மல்லனின் ஆற்றலை அடக்கி, அவன் மார்பில் ஒருகாலை ஊன்றி மற்றொரு காலால் அவன் எதிர்ப்புக்களை விலக்கி, பச்சை மூங்கிலை வளைத்து ஒடித்துத் தின்ன முயலும் யானையைப்போல, அம்மல்லனின் காலும் தலையும் முறிய அவனைக் கொன்று வெற்றிமாலை புனையும் இவனை (போர்வைக் கோப்பெருநற்கிள்ளியை) போர் வெல்லும் திறமைமிக்க தித்தன் என்னும் இவன் தந்தை, மகிழ்ந்தாலும் மகிழாவிட்டாலும் காண்பானாக.

[மைந்து—வலிவு—; முருக்கி — கெடுத்து; போர்அரும்—போரில் மிக்க; பணை—மூங்கில்; இருதலை—தலையும் காலும்; ஒசிய—முறிய;]

தித்திக்கிறதல்லவா! தித்தன்—கிள்ளி—மல்லன்! தி. க.—தி. மு. க.—காங்கிரஸ் என்று எண்ணிப்பார்த்திடும் போது, எனக்கு மட்டும் இனிப்பாகவா இல்லை?

தித்தன் போல்' அவரும் காணட்டும் அகமகிழட்டும் என்று எண்ணி, தேர்தல் களத்திலே' இறுமாந்து நிற்கும் மல்லனுடன் போரிட்டாக வேண்டும்.

தமிழ் மரபினை மறவாத உன் ஆற்றல், பலன்தராமலா போகும்!

அன்பன்,

அண்ணாத்துரை.

காங்கிரஸ் நாணயம்



பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நேரு பண்டிதர் ஆங்கிலத்தில் பேச, "அது கூடாது; இந்தியில் பேசுங்கள்! இந்தியில் பேசுங்கள்!" என்று பல காங்கிரஸ்காரர்கள் கூச்சலிட, "முடியாது, ஆங்கிலத்தில்தான் பேசுவேன்" என்றாராம். இதனைப் பார்டர் கட்டி, பிரசுரித்திருக்கும் ஏடுகளில் வந்த படங்களைத்தான், இதோ பார்க்கிறீர்கள்! இவைதான், டில்லி சர்க்கார், விரைவில் வெளியிட இருக்கும் புது நாணயங்கள்!

மீண்டும் ஒருமுறை பாருங்கள், 1, 2, 5, 10, 25, 50 என்று இருப்பவைகள் எல்லாம் நயா பைசாக்களாம்! நயா என்றால், இந்தியில், புதிது என்று பொருளாம். ஒரு ரூபாயை நூறுபாகமாகப் பிரித்து தசாம்ச முறையில், நாணயமாற்றினை ஆக்கப் போகிறார்களல்லவா? அதற்காகத்தான, இப் புது நாணயங்கள். இவைகள்தான், இனிமேல் இமயம் முதல் குமரி வரை வழங்கப்படப்போகின்றன. கன்னடியரும், தெலுங்கரும், கேரளத்தாரும், நாமும், மராட்டியரும் வங்காளியும் உபயோகப்படுத்தப் போகிற 'பணநாதர்களின்' உருவங்கள் இவை. அவைகளில், எந்த மொழி பொறிக்கப்பட்டிருக்கிறது, கண்டீர்களா? ஒரு ரூபாய் நாணயத்தில்மட்டும் ஆங்கிலம் இருக்கிறது! அதுவும் இந்தியா என்று குறிப்பிட!! ஏனையவைகளிலெல்லாம் இந்திதான்!! குருடர்கள், பொருள்களைத் தடவிக் கண்டுபிடிப்பதுபோல, நாம் கண்ணிருந்தும் குருடராய், வெறும் எண்களைக் கொண்டுமட்டுமே இவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தளவுக்கும் பழக்கமற்ற நமது நாட்டுப்புறத்து அண்ணன் தம்பிகள் அல்லாடத்தான் வேண்டும்.

காஞ்சி நகர சபை வரவேற்பைப் பெற்றபோது கூட, இந்தியத் தலைவர் பிரசாத்சொன்னார், "நாங்கள் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்த மாட்டோம்", என்று. இதோ, இந்தி! அஞ்சலட்டைகளை ஆக்கிரமித்துக் கொண்டது முதலில்! இப்போது, 'ஜீவாதாரத்தையும்' ஆக்கிரமித்துக் கொள்ளுகிறது!!

இந்த இலட்சணத்தில், இந்தி வெறி கூடாது என்று கூறும் நேரு பண்டிதர் நாடாளும் முதல்வர். அவரது வாய், இனிக்கப் பேசுகிறது! காரியமோ இப்படி நடைபெறுகிறது!! காங்கிரஸ் நாணயம் இவ்விதம் இருக்கிறது!

★



REGD. NO. M. 4642 போன் நெ. 15

சித்திரக்காரரின் புத்திகூர்மையைப் பாருங்கள்! புற்றுநோய் கண்டுவிட்டது காங்கிரசுக்கு என்று விளக்க வந்த அவர், தொந்தியை எப்படிப் போட்டிருக்கிறார் பார்த்தீர்களா? உழைக்காதவனுக்கும், உயரப்பனுக்கும், மார்வாடிக்கும், மதோன்மத்தனுக்கும் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது தொந்தி! அவ்வண்ணமாகிவிட்டதாம், காங்கிரஸ். உண்மைதானே, இன்று அந்த இயக்கத்தில் யார் இருக்கிறார்கள்? வினோபா போன்ற காந்தியின் தொண்டர்கள், காங்கிரசின் போக்கு சகிக்காது, பூதானம் என்று புது வேலை தேடிக்கொண்டு செல்லுகிறார்கள்! அந்தப் பணியிலாவது மன நிம்மதி கிடைக்காதா என்று காந்தியாருக்குக் காரியதரிசியாயிருந்த பியாரிலால், டாக்டர் சுசிலா நய்யார் போன்றோரும் ஈடுபட்டு விட்டார்கள்! எஞ்சியிருப்பது மந்திரிகளாயிருக்கும், தலைவர்கள். அவர்கள் தமது செல்வாக்குக் குறைந்துவிடக் கூடாதே என்பதற்காக 'வலை' வீசிப் பிடிக்கும் புது காங்கிரஸ்காரர்கள். உழைப்பாளியைப் போல இருக்க வேண்டிய காங்கிரசின் தோற்றம் உண்டு கொழுத்தவனுகத்தானே சித்தரிக்கப்பட வேண்டும்? அதைத்தான் செய்திருக்கிறார், அனுதினமும் காங்கிரசுக்குத் துதிபாடும் 'மித்திரனின்' ஓவியர்! பெருத்த வயிற்றில், புற்றுநோய் வேறு கண்டுவிட்டதாம்-காங்கிரசுக்கேற்பட்டுள்ளநோயைக் குறிப்பிடுகிறார், அவர். கண்டதையும் கொண்டதையும் போட்டு அடைத்தால், ஜீர்ணிக்க முடியுமா, வயிற்றில்? புற்றுநோய் கண்டுவிட்டது காங்கிரசுக்கு! யாரார் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள்? வடபாதி மங்கலம், செட்டி நாடு, நெடும்பலம், லால்குடி, டி.வி.எஸ். இவ்வளவு 'நுழைந்தால்' புற்றுநோய் வராமலா இருக்கும்? மித்திரன் கூறுவதைத்தான் காங்கிரஸ் தலைவர் தேபரும் நேருவும் கூறுகிறார்கள் "காங்கிரஸ் வரவர கெட்டுவருகிறது" என்று. ஆனால், 'நம்ம'காமராஜ் என்னசொல்கிறார் தெரியுமோ? இதெல்லாம் புகுந்து, வயிறும் உருவும் புடைப்பதுதான் நன்றாக உள்ளதாம்! காங்கிரஸ் இன்று எவ்வளவு சக்தி பெற்றுவிட்டது தெரியுமா, என்கிறார்!

புற்று நோய், ஒரு மனிதனை சாவுலகத்திற்குக் கொண்டு செல்லும் நோய் என்கின்றனர், வைத்யர்கள்.

காங்கிரசுக்கும் அந்தக் கட்டம் வந்துவிட்டதாம்! சொல்வது நாமல்ல; சுதேசமித்திரன்.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.